AR
57

திருப்புலிவனம்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008.
2016, திருவள்ளுவர் ஆண்டு - 2047.

திருப்புலிவனம்

திருப்புலிவனம்

பதிப்பாசிரியர்
முனைவர் **தா. கார்த்திகேயன்,** இ.ஆ.ப.,
ஆணையர்.

ஆசிரியர்
இரா. ரகுராமன்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை – 600 008.
2016, திருவள்ளுவர் ஆண்டு 2047.

அச்சிட்டோர் விவரம்

நூலின் பெயர்	:	திருப்புலிவனம்
பதிப்பாசிரியர்	:	முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., ஆணையர்.
ஆசிரியர்	:	இரா. ரகுராமன்
வெளியீட்டு உரிமை	:	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
மொழி	:	தமிழ்
வெயீட்டு எண்	:	283
பதிப்பு	:	முதற்பதிப்பு
ஆண்டு	:	2016 - திருவள்ளுவராண்டு 2047
பிரதிகள்	:	1000
பக்கங்கள்	:	112
எழுத்து அளவு	:	12 புள்ளிகள்
தாள் அளவு	:	80 GSM MAPLITHO
விலை	:	ரூ. 47.00
அச்சிட்டோர்	:	தரமணி மகளிர் கூட்டுறவு அச்சகம், 46, பீட்டர்ஸ் ரோடு, இராயப்பேட்டை, சென்னை - 600 014.

பொருளடக்கம்

பதிப்புரை

பக்கம்

1. திருப்புலிவனம் அமைவிடம் மற்றும் பெயர்க்காரணம் ... 1
2. திருப்புலிவனம் - ஒரு பார்வை ... 6
3. இலக்கியங்களில் திருப்புலிவனம் ... 7
4. வியாக்ரபுரீஸ்வர கோயில் கட்டட மற்றும் சிற்பக்கலை ... 10
5. அரசியல் ... 25
6. சமுதாய பொருளாதாரச் செய்திகள் ... 41
7. கல்வெட்டுச் செய்திகள் ... 50
8. விழாக்களும் வழிபாடுகளும் ... 71
9. திருப்புலிவனம் வியாக்ரபுரீஸ்வரர் கோயில் கல்வெட்டுகள் ... 75
10. நிழற்படங்கள் ... 89

முனைவர் **தா. கார்த்திகேயன்,** இ.ஆ.ப.,
ஆணையர்.

தொல்லியல் துறை
தமிழ்வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை - 600 008.

பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, தமிழகத்திலுள்ள கல்வெட்டுகள், தொல்லியல், அகழாய்வு, தமிழகக் கோயில்களின் கட்டடம், கலை, சிற்பம், ஓவியம், செப்புத்திருமேனிகள் ஆகியவற்றைப் பற்றி விரிவாக மாணவர்கள் கற்கவேண்டி 1973-74-ஆம் ஆண்டு கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஒன்றினை நிறுவியது. இக்கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஆண்டுதோறும் முதுகலைப் பட்டம் பெற்ற எட்டு மாணவர்களுக்கு 'கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்' என்னும் முதுநிலைப் பட்டயம் ஒன்றினை வழங்குகிறது. இதுவரை இப்பயிற்சி நிறுவனத்தில் 192 மாணவர்கள் பயின்றுள்ளனர்.

இம்மாணவர்களது பயிற்சிக் காலத்தில் ஒரு குறிப்பிட்ட கோயிலைத் தேர்வு செய்து, அக்கோயில் அமைந்துள்ள ஊரைப்பற்றியும், அங்குள்ள பிற முக்கியமான கோயில்களைக் குறித்தும் விரிவாக ஆய்வு செய்து ஆய்வேடு ஒன்றினைச் சமர்ப்பிக்கின்றனர். இவ்வாய்வேடுகளில் இதுவரை 37 ஆய்வேடுகள் நூல் வடிவம் பெற்றுள்ளன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் 2005-2006 ஆம் ஆண்டு பயின்ற திரு. இரா. ரகுராமன் அவர்கள் எழுதிய திருப்புலிவனம் என்னும் ஆய்வேடு தற்போது 38-ஆவது நூலாக வெளிவருகிறது. இந்நூலின் மூலம், திருப்புலிவனத்தில் உள்ள இறைவனை வியாக்ரபாதர் (புலிக்கால் முனிவர்) வழிபட்ட காரணத்தினால் இறைவன் 'வியாக்ரபுரீஸ்வரர்'என்றும் இவ்வூர் 'திருப்புலிவனம்' என்றும் பெயர் பெற்றதாக அறியப்படுகிறது. மேலும், இறைவன் சாபத்தினால் புலியாக பிறந்த முனிவர் புலிவனம் வந்து வழிபட்டதனால் இவ்வூர் புலிவனம் எனப் பெயர் பெற்றது என்றும், வேங்கை மரங்கள் நிறைந்து இருந்ததினால் 'புலிவனம்' என்ற பெயர் வந்தது. திருப்புலிவனம் 'வியாக்ரபுரீஸ்வர்' கோயிலின் கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவைப் பற்றியும், கோயில் கல்வெட்டுகளின் மூலம் அக்கால அரசியல், சமுதாய பொருளாதாரச் செய்திகளையும் விரிவாக அறியலாம்.

திருபுலிவனம் என்னும் இந்நூல் பதிப்பிக்கும் பணியினை மேற்கொண்ட இத்துறை தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர் முனைவர். சீ. வசந்தி, மற்றும் கரூர் காப்பாட்சியர் திரு. சி. செல்வக்குமார் ஆகியோருக்கு எனது மனமார்ந்த பாராட்டுகள். மேலும் நல்ல முறையில் D.T.P செய்து வண்ண அட்டைப்படம் வடிவமைத்த அச்சுக்கோர்ப்பாளர் திருமதி கு. கோகிலா, இந்நூலினை நல்ல முறையில் அச்சுப்பிழைத்திருத்தம் செய்த திருமதி கோ. கீதா, அவர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகள்.

தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் கீழ் 2015-2016-ஆம் ஆண்டில் பத்து மாணவர்களின் ஆய்வேடுகள் நூலாக்கம் செய்வதற்கு நிதியுதவி நல்கி சிறப்பிக்கும் தமிழ்நாடு அரசுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வரலாற்று மாணவர்களுக்கும், தொல்லியல் மாணவர்களுக்கும், தொல்லியல் ஆர்வலர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் பயனுடையதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆணையர்

திருப்புலிவனம் அமைவிடம் மற்றும் பெயர்க்காரணம்

திருப்புலிவனம் அமைவிடம்

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டத்தில் திருப்புலிவனம் ஊர் அமைந்துள்ளது. சங்க கால தொண்டை மண்டலத்தின் தலைமை நகராக விளங்கிய காஞ்சிபுரத்தில் இருந்து தெற்கே 25 கி.மீ. தொலைவிலும், ஊராட்சி நிர்வாகத்தினை தேர்ந்தெடுக்கும் குடவோலை முறையை நமக்குத் தந்த உத்திரமேரூரில் இருந்து வடக்கே 5 கி.மீ தொலைவிலும், செங்கல்பட்டிலிருந்து - 26 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது.

திருப்புலிவனத்திற்கு பேருந்து மார்க்கம்

சென்னையிலிருந்து காஞ்சிபுரம் சென்று உத்திரமேரூர் செல்லும் பேருந்தின் மூலம் பயணம் செய்தால் இத்தலத்தை அடையலாம். கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து வந்தவாசி செல்லும் பேருந்தில், செங்கல்பட்டு வழியாக உத்திரமேரூரை அடைந்து அதன் பின்பு காஞ்சிபுரம் செல்லும் பேருந்தின் மூலமாகவும் இத்தலத்தை அடையலாம்.

இத்தலத்திற்கு நேரிடையான இரயில் வசதி இல்லை. சென்னை கடற்கரை இரயில் நிலையத்தில் இருந்து செங்கல்பட்டு வரையிலும் பின்பு பேருந்தின் மூலமாக உத்திரமேரூரை அடைந்து, காஞ்சிபுரம் செல்லும் பேருந்தில் பயணம் செய்தாலும் இந்த தலத்தினை நாம் அடையலாம்.

‘திரு’ எனத் தொடங்கும் பெயருடைய ஊர்கள் பெரும்பாலும் பாடல் பெற்ற தலங்களாகவும் இருக்கும். உதாரணமாக

1. திருவண்ணாமலை
2. திருவரங்கம்
3. திருவொற்றியூர்
4. திருநள்ளாறு
5. திருக்கழுக்குன்றம் ஆகிய ஊர் பெயர்களை குறிப்பிடலாம்.

தமிழகத்தில் உள்ள ஊர் பெயர்களை கூர்ந்து கவனித்தால் இறைவனுடைய பெயர் ஊருக்கும் ஊரினுடைய பெயர் இறைவனுக்கும் இருக்கும். அதன்படி இறைவனுடைய திருநாமத்தை தாங்கிய ஊர் திருப்புலிவனம்.

தமிழ்நாட்டில் புலிவனம், புலியூர் என்ற பெயரில் பல ஊர்கள் உண்டு. அந்த வகையில் 1. திருஓமாம்புலியூர், 2. திருஎருக்கத்தம் புலியூர், 3. பெரும்பற்றப்புலியூர் ஆகியன குறிப்பிடத்தக்கவை. பெரும்பற்றப்புலியூர் என்பது தில்லை என்றழைக்கப்படும் சிதம்பரத்திற்கு உள்ள மற்றொரு பெயராகும்.

கோட்டம்

தொண்டைமண்டலத்தில் 24 கோட்டங்கள் இருந்தன. அவற்றில் ஒன்று புலியூர் கோட்டம் ஆகும். பெரியபுராணத்தை பாடிய சேக்கிழார்பெருமான் அவதரித்த குன்றத்தூர் - புலியூர் கோட்டத்தை சார்ந்த பகுதியாகும். சென்னை நகரில் உள்ள கோடம்பாக்கத்தின் ஒரு பகுதி ‘புலியூர்’ என வழங்கப்படுகின்றது. இக்கோட்டம் இவ்வூரின் பெயரால் அமைந்திருந்தது. பிரசித்தி பெற்ற வடபழனி கோயிலுக்கு அருகில் வியாக்ரபாத முனிவர் பூசித்த சிவன் கோயில் உள்ளது. இவ்வூரும் வியாக்ரபாத முனிவர் வழிபட்டதால் இப்பெயர் பெற்றது என்பர். அதே போன்று கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர் ஆகிய மாவட்டங்களில் பல ஊர்கள் புலிவனம், புலிவலம் என்று அழைக்கப்படுகின்றது.

திருப்புலிவனம் பெயர்க் காரணம்

புத்திர பாக்கியம் இல்லாததால் வருந்திய மத்தியந்தின முனிவர் சிவபெருமானை நோக்கி கடும் தவம் புரிய இறைவனின்

அருளால் ஒரு மகனுக்கு தந்தை ஆனார். உரிய பருவத்தில் அச்சிறுவன் சிவதீட்சை, பஞ்சாட்தர உபதேசம் ஆகியன கொண்டான். அழியக் கூடிய போகங்களை அளிக்க வல்ல தவத்தை விட சிவ வழிபாடே உயர்வையும், மறுமை இன்பத்தையும் தரும் என மத்தியந்தின முனிவர் வழி காட்டினார்.

தில்லையம்பலத்தில் சிவலிங்கத்தை நிறுவி அதிகாலையில் நீராடி சிவசின்னங்களை தரித்த பின் அந்த லிங்கத்தை மலர்களால் பூசிப்பதே சாலவும் சிறந்தது என கூறினார். அவ்வாறே முனிகுமாரனும் தில்லை வனத்தில் பர்ணசாலை அமைத்து வழிபட்டு வந்தார். அதிகாலை வண்டுகள் தீண்டாத மலர்களை ஈசனுக்கு அளிப்பதை விரதமாக கொண்டு விளங்கினார்.

மழைக்காலங்களில் மரங்களில் ஏறும் போது கால்கள் சறுக்காமல் இருக்கவும் தேவைப்பட்ட மலர்களை மட்டும் பறிக்கக் கூடிய அளவிற்கு கண்பார்வை கூர்மையாக விளங்கவும் புலியின் கால்கள், கண்கள், வால் ஆகியவற்றை இறைவன் முனிவருக்கு கொடுத்து அருளினார். இதனால் முனிகுமாரருக்கு வியாக்ரபாதர் (புலிக்கால் முனிவர்) எனப் பெயர் ஏற்பட்டது. தில்லையில் பல நாட்கள் தங்கியிருந்து ஈசனின் திவ்ய நடனத்தை கண்டு களித்தவாறு பூஜை செய்தார். வியாக்ரபாகர் பூசித்த லிங்கம் இடம் பெற்றுள்ள கோயில் வியாக்ரபுரீஸ்வரம் (இளமையாக்கினார் கோயில்) என்று அழைக்கப்படுகின்றது. இவை தவிர வேறு பல தலங்களிலும் வியாக்ரபாதர் வழிபட்டதாக அந்தந்த தல புராணங்கள் கூறுகின்றன.

திருப்புலிவனத்தில் உள்ள இறைவனை வியாக்ரபாதர் வழிபட்ட காரணத்தினால் வியாக்ரபுரீஸ்வரர் என்று அழைக்கப்படுவதாக கூறப்படுகிறது.

முனிவர் ஒருவர் சாபத்தினால் புலியாக பிறந்தும் இறைவனை பூசித்து வந்தார். சாப விமோசனம் என்னும் அருளிற்காக காத்திருந்த காலத்தில் ஒரு செல்வ வணிகன் தான் விற்க இருக்கும் பொருட்கள் மலிந்திருந்த காலத்தில் அந்த பொருட்கள் நன்கு விற்க ஈசனை வேண்டினான்.

அவன் வேண்டியபடியே பொருட்கள் அனைத்தும் விற்றுப் போக அதற்கு நன்றியாக அந்த சிவலிங்கத்திற்கு மலர்தூவி நீர் பெய்து தூபம் இட்டு தன் நன்றியை செலுத்தினான். வழக்கமாக தான் பூஜை செய்யும் நேரம் நெருங்கியதும் கோயிலை வந்தடைந்த புலி இறைவனுக்கு நடந்த சைவ சைத்யோபகாரங்களை கண்டு கோபம் அடைந்தது. தன்னை நிராகரித்து பிறர் பூசையை ஏற்ற இறைவன் மீது கோபம் கொண்டு சிவனையே தாக்கத் தொடங்கியது. அதனுடைய சாப விமோசன காலம் நெருங்கிற்று. அருகில் உள்ள கருவேப்பம்பட்டியில் புலி இறைவனால் அழிக்கப்பெற்று சாப விமோசனம் பெற்றது.

வியாக்ரம் என்றால் புலி வியாக்ரத்திற்கு அருள் புரிந்தமையால் இவர் வியாக்ரபுரீஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார்.

இறைவன் சாபத்தினால் புலியாகப் பிறந்த முனிவர் புலிவலம் வந்து இத்தலத்து ஈசனை நித்தம் வலம் வந்து வணங்கி வழிபட்டு இறுதியில் முக்தி பெற்றதினால் இத்திருத்தலம் 'புலிவலம்' எனவும் திரு என்னும் சிறப்பும் சேர்ந்து திருப்புலிவலம் என்று ஆனது. பின்பு இப்பெயரும் மருவி தற்பொழுது திருப்புலிவனம் என்று அழைக்கப்படுகின்றது.

புலி என்பதற்கு 'வேங்கை மரம்' என்ற ஒரு பொருள் உண்டு. வலம் என்பதற்கு அந்நாளில் இடம் என்ற ஒரு பொருள் உண்டு. அந்நாளில் வேங்கை மரங்கள் நிறைந்து இருந்ததினால் சிதம்பரத்திற்கு 'தில்லை' என்ற பெயரே முதலில் வழங்கப்பெற்றது. அது போலவே புலிவலம் என்ற பெயரும் வந்தது. புலி வடிவில் இருந்த முனிவர் இத்தலத்து இறைவனை வழிப்பட்டு முக்தி பெற்றதினால் இத்தலத்திற்கு 'திருப்புலிவனம்' என்ற பெயர் ஏற்பட்டது.

வியாக்ரபுரீஸ்வரர் சிரசில் முடி தோன்றியதற்கான காரணம்

இந்தச் சிவலிங்கத்தின் மேனியில் புலியின் பாத சுவடு மற்றும் விலா எலும்பு தெரிவது போன்று இதன் சிரசில் முடிக்கற்றை போன்ற அமைப்பு காணப்படுகின்றது. இதே போன்ற அமைப்பு

1. குடுமியான் மலை, 2. பொன்விளைந்த களத்தூர் ஆகிய இடங்களில் காணப்படுகிறது.

இக்கோயில் அர்ச்சகர் பெரும் பக்தராய் விளங்கிய போதும் ஒரு தாசியின் பால் பற்றுக்கொண்டிருந்தார். அவர் தினமும் இறைவனுக்கு சூட்டிய மாலையை அவளுக்கு கொடுத்து விடுவது வழக்கம். அவளும் அந்த மாலையை சூடி மகிழ்வாள்.

இப்படி இருக்கையில் ஒரு நாள் அரசன் எதிர்பாராத விதமாக கோயிலுக்கு வர, இதனைக் காவலர்கள் மூலம் அறிந்த அர்ச்சகர், ஏற்கனவே பூசை முடிந்து தாசியிடம் கொடுத்த மலர் மாலையை அவசரமாக வாங்கி வந்து இறைவனுக்குச் சாத்தி அதனை அரசனிடம் அளித்தான்.

மாலையுடன் அரண்மனை திரும்பிய மன்னன் அந்த மாலையில் நீண்ட முடிகள் இருப்பதைக் கண்டு கோபமடைந்தான். மறுநாள் இது பற்றி அர்ச்சகரிடம் விசாரிக்க எண்ணி உறங்கச் சென்றான். மாலையில் முடி இருந்ததையும் அரசன் கோபமாக இருப்பதையும் அறிந்த அர்ச்சகர் கவலையுற்று சிவபெருமானைச் சரணமென்று அழுதுப் புலம்பினார். அயர்ச்சியில் அப்படியே உறங்கியும் போனார்.

கனவில் தோன்றி சிவபெருமான் அரசன் தன் மாலையில் கண்டது இறைவனின் முடிகளே எனக் கூறுமாறு கூறினார். மறுநாள் அரசன் இது பற்றி விசாரிக்க சிவபெருமான் கனவில் கூறியபடியே அது இறைவனின் திருமுடி எனக்கூறினார்.

இந்த பதிலில் திருப்தி அடையாத மன்னன் இறைவனின் திருமுடியைத் தனக்கு காட்டுமாறு கூற அர்ச்சகர் இறைவனை தியானித்தபடியே மாலைகளை களைய இறைவன் அழகிய குடுமியுடன் காட்சி அளித்தார். இந்த நிகழ்ச்சியை உலகிற்கு உணர்த்த அந்தக் குடுமி அப்படியே கல்லாக இருக்கும்படி இறைவன் செய்தார் என்று புராண வழிச்செய்தி கூறப்படுகிறது.

❖✡❖

திருப்புலிவனம் ஒரு பார்வை

தொண்டை நாட்டு கோயில்கள் பற்றிய அறிஞர்களின் நூல்கள்

முற்காலத் தென்னிந்திய வரலாற்றில் 'காஞ்சிபுரம்' என்ற நூலினை டி.வி. மகாலிங்கம் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். மேலும் சென்னை பல்கலைகழக ஆய்வேடுகள் பல தொண்டை நாட்டு ஊர்களைப் பற்றி ஆய்வு செய்து வெளிவந்துள்ளன. தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை பயிற்சி மாணவர்களின் ஆய்வேடுகள் பலவும் தொண்டைநாட்டு கோயில்கள் பலவற்றை ஆய்வு செய்துள்ளன. மேலும் மயிலை சீனிவேங்கடசாமி, கே.வி. இராமன், ஏகாம்பரநாதன், சு. இராசவேலு, மற்றும் பாஸ்கர தொண்டைமான் ஆகியோரும் தொண்டை மண்டலம் மற்றும் கோயில்களை பற்றி பல நூல்கள் எழுதியுள்ளனர்.

கோயில் பற்றி டி.வி. மகாலிங்கம் அவர்களின் கருத்து

ஓர் ஊரில் உள்ள மக்களின் உயிர் துடிப்புள்ள இடமாக கோயில் விளங்கியது. அவ்வூர் மக்களின் அரசியல், சமூகம், பொருளாதாரம் ஆகிய துறைகளைச் சேர்ந்த பல்வேறு இயக்கங்களின் பங்கு கொண்ட சமூக நிறுவனமாக அது விளங்கியது. கோயில் ஆய்வு என்பது பண்டைய சமுதாய வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் பற்றிய ஆய்வாகும். டி.வி. மகாலிங்கம் அவர்கள் சோழர் காலத்துக் கோயில்கள் சமுதாயத்தின் மையமாக விளங்கியத் தன்மையை எடுத்துக்காட்டியுள்ளார்.

❖✡❖

இலக்கியங்களில் திருப்புலிவனம்

சமயக் குரவர்களான அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் பல திருத்தலங்களுக்கு சென்று அங்கு எழுந்தருளியுள்ள ஈசன் மீது பல பதிகங்களை இயற்றித் துதித்து உள்ளனர். இத்தலங்களைப் பாடல் பெற்ற தலங்கள் எனவும், திருமுறைத் தலங்கள் எனவும் சைவ அன்பர்கள் போற்றியுள்ளனர்.

திருப்புலிவனம் வைப்புத்தலம்

ஒரு தலத்தைப் பற்றி பாடும் போது அருகில் உள்ள தலங்களைப் பற்றி கேள்வியுற்று அவற்றின் பெயர்களையும் தங்களின் பாடல்களில் குறிப்பிட்டு உள்ளனர். இவ்வாறு சமயக் குரவர்கள் தலத்திற்கு நேராகச் சென்று பதிகம் பாடாமல் பிற தலங்கள் மீது இயற்றிய பதிகங்களிலும், சேத்திரக் கோவை, ஊர்த்தொகை போன்ற பொது பதிகங்களிலும் குறிப்பிட்டுள்ள தலங்கள் 'வைப்புத்தலங்கள்' எனப்படுகின்றன. புலிவலம் என்ற பெயரில் பல தலங்கள் தமிழகமெங்கும் உள்ளன. தஞ்சை, காஞ்சிபுரம், கடலூர் முதலிய பல மாவட்டங்களில் இவ்வூர் உள்ளன. புலிவனம் புத்தூர் என்று தேவாரத்தில் புலிவலம் போற்றப்படுகிறது. புலிவலத்திற்கு தனியே பதிகம் இல்லாததால் இதனை வைப்புத் தலமாக போற்றுகின்றனர்.

திருப்புலிவனமே தேவாரத்தில் கூறப்படும் புலிவலம் என்பதற்கான ஆதாரங்கள்

கல்வெட்டுகள் இந்த ஊரினை 'புலிவலம்' என்றும் இறைவனை 'புலிவலமுடையார்' என்றும் குறிக்கின்றன. திருப்புலிவனத்தில் புலிசிவலிங்கத்தை பூசிக்கும் காட்சிகள் தூண்களில் செதுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான திருத்தலப் பயணக் குறிப்பை எழுதிய நூல் ஆசிரியர்கள் தஞ்சை மாவட்டத்தில் திருவாதிரை அடுத்து உள்ள புலிவலத்தையே வைப்புத் தலமாக குறித்துள்ளனர். இத்தலத்தைப் பற்றி திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்தில் 2 பாடல்களும், பட்டினத்தார் பாடல் 12-ம், சிவஞான வள்ளலார் அருளிய பாடல்கள் 66-ம் உள்ளன.

இத்தலத்தைப் பற்றி சேத்திரக் கோவைப் பகுதியில் திருநாவுக்கரசர் அருளிய தேவாரப் பாடல் வருமாறு

"புலிவலம் புத்தூர் புகலூர் புன்கூர் புளம்பயம் பூவணம் பொய்கை நல்லூர்
வலிவலம் மாற்பேறு வாய்மூர் வைகல் வலஞ்சுழி வாஞ்சியம் மருகல் வன்னி
நிலிமலி நெய்த்தானத்தோடு எத் தானத்தும் நிலவு பெருங் கோயில் பல கண்டால் தொண்டீர்
கலிவலி மிக்கோனைக் கால் விரலாற் செற்ற கயிலாய நாதனையே காணலாமே"

திருமுறை எண் 6-இல் பதிக எண் 70-இல் 11-ஆவது பாடல்.

"தானம் புலிவன னோபா சாளுத்த கணமவெ : கேன்
வானம் புலிவல மாமுகவார் முலை மாது பங்கன்
தேனம் புலிவல வல்லி மலர் கொண்டாச் சித்திலறயம்
மானம் புலிவல வாழ்வுற்றிருப்பன் மனமுகந்தே"

தேவார வைப்புத்தலக் கட்டளைக் கலித்துறை

"நிலாவு புகழ்த் திருவோத்தூர் திருவாமாத்தூர் நிறை நீர்
சுலாவு கடையோன் புலிவலம் வில் வலம் கொச்சை தொண்டர்
குலாவும் திருப்பனங்காடு நன்மாகறல் கூற்றம் வந்தால்
அலாய் என்று அடியார்க்கு அருள்புரி ஏகம்பராலயமே !
திருச்சிற்றம்பலம்"

11-ஆம் திருமுறை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி பட்டினத்துப் பிள்ளையார்.

"ஒன்றாகி உணர்வு ஒருங்கி ஓமொழிப் பொருள் தானாகி
மன்றாடும் நின்னை அன்பின் வழிபடும் அறிவு ஒன்று இன்றிப்
பொன் தாலி பூட்டும் மாதர் புணர்ச்சியே பொருள் என்று எண்ணிச்
சென்றாடி உணங்கிப் போனேன் திருப்புலிவனத்துளானே"

-சிவஞான வள்ளலார்

"புன்கூரார் புறம் பயத்தார் புத்தூர் உள்ளார் பூவணத்தார் புலிவலத்தார் வரியின் மிக்க
தன்கூர்மை கருதி வரை எடுக்கஒற்றான் தலைகளொடு மலைகள்
அன்னதாளும் தோளும்
பொன் கூடும் கழலடி ஓர் விரலால் ஊன்றிப்
பொருப்பதன் கீழ்நெரித்தருள் செய் புவன நாதர்
மின் கூரும் கடை முடியார் விடையின் பாகர் விழிமிழலையே மேவினாரே"

திருநாவுக்கரசர் ஆறாம் திருமுறை திருவீழிமிழலை பதிகம் புன்கூர் (6-51-1)

சிவஞான வள்ளலார்

"வாயெதிர் போய்ச் சேதா வலியப் புசியென்னத்
தீய புலி ஊனுண்டல் தீதென்னக் - தூய
விரதத்தைக் கண்டு விடையோன் வந்தாவை
விரதத்தைச் செய்ய விரும்பு"

புலி முற்பிறவியில் முனிவராக இருந்த காரணத்தினால் கொல்லா விரதத்தை மேற்கொண்டு இருந்ததையும், தன் (புலியின்) எதிரில் வந்து தன்னைச் சாப்பிட வற்புறத்திய பசுவையும் உண்ணாது, தாவர உணவு வகைகளையே உண்டு வந்து, அதன் சாப விமோசனம் காலம் நெருங்கியதால் அவரின் (புலியின்) பக்திக்கு மகிழ்ந்த விடை ஊர்தியனான சிவபெருமான் அப்புலிக்கு காட்சி கொடுத்து முக்திப்பேறு வழங்கியதாக கூறுகிறது இப்பாடல்.

❖✡❖

வியாக்ரபுரீஸ்வர ஆலய கட்டட மற்றும் சிற்பக்கலை

கோயில் கட்டடக்கலை

தமிழகத்தின் தொன்மையான நகரமான பூம்புகாரில் 1. பிறாவாயக்கை பெரியயோன் கோயில், 2. ஆறுமுகச் செவ்வேள் அணி திகழ் கோயில், 3. நீலமேனி நெடியோன் கோயில் எனப் பல கோயில்கள் இருந்தன என சிலப்பதிகாரம் கூறுகிறது.

மணிமேகலை

மணிமேகலையோ இதற்கு மேலும் பல தெய்வங்களின் உறை கோட்டங்கள் இருந்தன என கூறும். இவையாவும் மண், மரம், சுதையால் கட்டப்பட்டதினால் அழிந்து விட்டன.

கட்டடக்கலையின் தொடக்க காலம்

இந்தியாவில் அசோகருடைய காலத்தில் தான் முதன் முதலில் மலைகளை குடைந்து கோயில் அமைத்தனர். இவை ஆஜீவக சமயத்தவருக்காக உருவாக்கப்பட்டவை. இவை வட்ட வடியில் அமைந்த எளிமையான குகைகள் ஆகும். அடுத்த இரண்டு நூற்றாண்டுகளில் பௌத்தர்கள் பூனா, நாசிக், அஜந்தா, அவுரங்காபாத் போன்ற பல இடங்களில் பல குடைவரை கோயில்களை அமைத்தனர். அதற்கடுத்து ஓரிஸ்ஸா, ஆந்திரா பகுதிகளிலும் இத்தகு கோயில்கள் உருவாயின. அடுத்து சில காலத்தில் சாளுக்கியர்களும் அவர்களைப் பார்த்து பல்லவர்களும், பாண்டியர்களும் குடைவரைகளைத் தோற்றுவித்தனர். சாளுக்கியர்கள் மிருதுவான பாறைகளைக் குடைந்து கோயில் அமைத்தனர். எ.கா. 1. பாதாமி, 2. ஐகோளே பல்லவ மன்னர்களோ கருங்கற் பாறைகளில் கோயில் எடுத்தனர்.

பல்லவர் கட்டட பணி

பல்லவர் காலம் தமிழக கட்டடக்கோயில்களின் தொடக்க காலம். மகேந்திரவர்மனின் மண்டகப்பட்டு கல்வெட்டு வாசகம் வருமாறு

"ஏதத் அனிஸ்டகம் அத்ருமம் அலோகம் அசுதம்
விசித்திர சித்தேன நிர்மா பிதம் நிருபேண
பிரம் மேஸ்வர விசஷ்ணு லட்சிதாதய தனம்"

இதன் காலம் ஏழாம் நூற்றாண்டு. கல்வெட்டு கூறும் செய்தி மண், மரம், சுதையின்றி சிவன், விஷ்ணு பிரம்மாவிற்கு கோயில் எடுப்பித்ததை கூறுகிறது.

பாண்டியர்களின் கட்டட பணி

பல்லவர்களின் சமகாலத்தவரான பாண்டியர்களும் மதுரையைச் சுற்றி குடைவரைகளை ஏற்படுத்தினர்.

பிறர் பணி

முத்தரையர், அதியமான்கள், ஆய்மன்னர் போன்ற சிற்றரசர்களும் கலைச் சின்னங்களை நிறுவினர். பல்லவ மன்னர்களான மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் இவர்களுடைய காலத்தில் 1. குகைக் கோயில்களும், 2. ஒற்றைக் கற்கோயில்களும் வளர்ச்சி அடைந்தது இராஜசிம்மன் பல்லவ மன்னன் காலம் முதல் கட்டடக் கோயில் என்னும் நிலையை அடைகிறது.

சோழர் காலம்

பல்லவர் காலத்தில் கட்டடக் கோயில்கள் வளர்ச்சி அடைந்தாலும் கட்டடக் கோயில்கள் முழு சிறப்பை பெற்றது சோழர்களுடைய காலத்தில் தான்

சோழர்கள் கோயிலோடு குடியமர்த்தி சிறப்புப் பெற்றவர்கள். அவர்களுடைய காலத்தில் நாடு முழுவதும் கற்றளிகள் கட்டப்பட்டன. செங்கற் கோயில்கள் கற்றளியாக மாற்றப்பட்டன. முதலாம் ஆதித்தன் காவிரியின் இருபுறமும் நூற்றுக்கணக்கான கோயில்கள் கட்டினான் எனச் செப்பேடுகள் கூறுகின்றன.

சோழ அரசிகள் எடுத்த கோயில்கள்

1. குந்தவை, 2. இலாட மாதேவி, 3. உலகமாதேவி போன்றோர் பல கோயில்கள் கட்டினர். தொண்டை மண்டலத்தில் திருமலை, லட்டிகம் தாதாபுரம் ஆகிய ஊர்களில் சோழ அரசிகள் கட்டிய கோயில்கள் உள்ளன.

வியாக்ரபுரீஸ்வரர் ஆலயம் - கட்டட காலக்கணிப்பு

அடிப்படைக் கட்டட காலம்	: பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மன்
கற்றளியாக மாற்றப்பட்ட காலம்	: முதலாம் குலோத்துங்கச் சோழன்
திருச்சுற்று மாளிகை மற்றும் மண்டபம்	: முதலாம் இராஜேந்திரன்
தக்ஷிணாமூர்த்தி ஆலயம்	: விசயநகர் பேரரசு காலம்
வெளி திருச்சுற்று மண்டபம்	: விசய நகர் பேரரசு காலம்
யாகசாலை	: விசயகண்ட கோபாலன் மற்றும் மாறவர்மன் குலசேகர பாண்டியன் காலம்
கோபுரம்	: விசயநகர் பேரரசு காலம்

குலோத்துங்கனின் கல்வெட்டில் காணப்படும் அபராஜிதவர்ம பல்லவனின் தானச் செய்தியும் இக்கோயிலின் காலம் கணிப்பதற்கு பெரிதும் உதவுகிறது.

திருப்புலிவனத்தில் வியாக்ரபுரீஸ்வரர் ஆலயம் அமைப்பு

1. அமைவிடம் ஊரின் வடக்குப்புறம்.
2. மூலவர் பெயர் வியாக்ரபுரீஸ்வரர்.

3. அம்மையின் பெயர் அபிதகுசலாம்பாள் (அ) அமிர்தகுசலாம்பாள்.
4. பூசித்ததாக கூறப்படும் நபர் வியாக்ரபாகர்.
5. கோயிலின் அமைப்பு மாடக்கோயில் வகையைச் சார்ந்தது.
6. கோயிலின் நீளம் - 164-அடி, அகலம் - 70 அடி.
7. மதில்சுவரின் நீளம் அகலம் நீளம் - 280அடி, அகலம்-230அடி.
8. கோயிலின் மொத்தப் பரப்பளவு 5 ஏக்கர் 73 செட்.
9. தல விருட்சம் வில்வ மரம், தீர்த்தம் வியாக்ரபாத தீர்த்தம்.
10. ராஜகோபுரம் - 3 நிலைகளை கொண்ட எளிய அமைப்பு.
11. விமானம் கஜ பிருஷ்ட அமைப்பு.
12. வெளிப்பிரகார மண்டபம் 16 கால்களை கொண்டது.
13. வெளிமண்டபம் 100 கால்களை கொண்ட தேர் மண்டபம்.
14. யாகசாலை கோயிலினுள் வடக்குப் புறம் உள்ளது.
15. அம்மன் சன்னதி கோயிலினுள் தெற்கு திசையில் வடக்குப் பார்த்து அமைந்துள்ளது.
16. கோயில் அமைந்திருக்கும் திசை கிழக்கு.
17. வியாக்ரபுரீஸ்வரர் சித்தர் சன்னதி அம்மன் கோயிலுக்கு கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது.
18. தேவாரத்தில் வைப்புத்தலம்.

மாடக்கோயில் அமைப்பிற்கான காரணம்

நந்தி மண்டபத்தில் இருந்து இராஜகோபுரம் வரை சற்று மேடாகச் சென்று இராஜகோபுரம் 3 படிகளை கொண்டும், திருச்சுற்று மண்டம் 5 படிகளை கொண்டும், மகாமண்டபம் 5 படிகளை கொண்டும் சென்று கருவறையானது தரையின் மட்டத்தில் இருந்து சுமார் 15 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இதன் காரணமாக இதனை மாடக்கோயில் என்று கூறலாம்.

வியாக்ரபுரீஸ்வரர் ஆலய கட்டடக்கலை அமைப்பு

இக்கோயில் 1. கருவறை, 2. உள்ளாலை, 3. அர்த்த மண்டபம், 4. ரங்க மண்டபம், 5. திருச்சுற்று மாளிகை, 6. மகா மண்டபம், 7. முன் மண்டபம், 8. வெளி திருச்சுற்று மண்டபம், 9. நந்தி மண்டபம், 10. கொடிமரம், 11. பலிபீடம், 12. அம்மன் சன்னதி, 13. யாகசாலை, 14. ராஜகோபுரம், 15. கேர் அமைப்புடைய 100 கால் மண்டபம், 16. வியாக்ரபாத தீர்த்தம் என கோயிலுக்கு உரிய பொதுவான கட்டடக் கலை அமைப்பினை இது பெற்றுள்ளது.

கருவறை

1. மூலவர் இடம் பெற்றுள்ள இடம்
2. சாதாரண வகை கருவறை அமைப்பு

மூலவரின் சிறப்பு அம்சங்கள்

1. சுயம்புலிங்கம், 2. சதுரவடிவ தாமரைபீடம், 3. ஸ்வாமியின் சிரசில் குடுமி போன்ற அமைப்பு இதே போன்று குடுமியான் மலை முன் குடும்பீஸ்வரர் ஆகிய இடங்களில் காணலாம். 4. மூலவரின் விலா எலும்பு போன்ற அமைப்பு லிங்கத்தில் தென்படுகின்றது. 5. கண்ணப்பரின் உதை அம்மையின் மூலைத்தழும்பு ஆகியவற்றை ஏற்றது போல் புலியின் பாத சுவட்டை ஏந்தியுள்ளார். கருவறையின் வெளிப்புற வாயிலில் நுண்ணிய கொடிக்கருக்கு போன்ற வேலைப்பாடுகள் காணப்படுகின்றன.

அதிட்டான அமைப்பு

கருவறையின் வெளிப்புறம் பத்மபீடம், கண்டம், கம்பு ஆகியவற்றுடன் கூடிய உபபீடம், உபானம், ஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், கம்பு, பட்டிகை, பித்தி, பூதவரி, கபோதம், யாளிவரி அதன் மேற்புறம் இருந்து ஸ்தூபி வரை செங்கற்களால் ஆன கஜபிருஷ்ட அமைப்பு என்று அமைந்துள்ளது. இதே போன்ற கஜபிருஷ்ட அமைப்பை அருகில் உள்ள மாகறல், திருப்பருத்திகுன்றம் ஆகிய இடங்களில் காணலாம்.

கல்வெட்டு

முதலாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டுக்கள் கருவறையின் பின்புறச் சுவரில் காணப்படுகிறது. இம்மன்னனின் 3, 25 மற்றும் 45-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன.

பஞ்ச கோட்டங்கள்

பெருங்கோயில்களுக்கு பஞ்ச கோட்டங்கள் இருக்க வேண்டும் என்பது நியதி. அதன்படி விநாயகர் தெற்கு கோட்டத்தில் காணப்படுகிறார். மகர தோரணத்தில் நடராஜர் காணப்படுகிறார். தட்ணாமூர்த்தி தெற்கு கோட்டத்தில் காணப்படுகிறார். தனிக்கோயில் போன்ற அமைப்புடன் விஷ்ணு மேற்கு கோட்டத்தில் காணப்படுகிறார். பிரம்மா வடக்கு கோட்டத்தில் காணப்படுகிறார். விஷ்ணுதுர்க்கை வடக்கு கோட்டத்தில் அமைந்துள்ளார் மகர தோரணத்தில் மகிசாசூரமர்த்தினி.

உள்ளாலை

கருவறைக்கு அடுத்து வரும் அமைப்பு மிக எளிமையான கட்டட அமைப்பு. உள்ளாலை நடைபாதையின் நடுவே சுமார் 15 அடி ஆழத்தில் சுரங்கம் போன்ற அமைப்பு காணப்படுகிறது. இது கற்களால் மூடப்பட்டுள்ளது. ஒரு எரிகின்ற கற்பூரத்தை இதன் உள்ளே போட்டால் அது தீச்சுடர் போல பாய்ந்து சென்று அடியில் நின்று எரியும் போது சுரங்கத்தின் உள் கட்டமைப்பு நமக்கு தெளிவாக தெரிகிறது. ஆபத்து நேரங்களில் விக்ரகங்களையும் கோயில் சொத்துக்களையும் பாதுகாப்பதற்காக இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டு இருக்கலாம்.

அர்த்த மண்டபம்

உள்ளாலைக்கு அடுத்துள்ள அர்த்தமண்டபத்தின் வாயிலின் இருபுறமும் துவாரபாலகர்கள் காட்சி அளிக்கின்றனர். துவாரபாலகரின் இடது பக்கம் ஒரு திண்ணை போன்ற அமைப்பு அர்த்த மண்டப முடிவு வரை காணப்படுகிறது. அர்த்த

மண்டபத்தின் இடதுப்புறம் $2 \times 2 = 4$, வலதுப்புறம் $2 \times 2 = 4$, ஆக 8 தூண்கள் உள்ளன. அர்த்த மண்டபத்தின் வடதிசையில் உற்சவர் அறை காணப்படுகிறது.

ரங்க மண்டபம் - விநோத அமைப்பு

அர்த்த மண்டப உற்சவர் அறை எதிரே ரங்க மண்டபம் என்ற பகுதி காணப்படுகிறது. இது அர்த்த மண்டபத்துடன் இணைந்து காணப்படும் விநோத அமைப்பாக உள்ளது. இந்த அமைப்பு சற்றே ஏறக்குறைய பெரிய கோயில் எனப்படும் தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலில் உள்ள அமைப்பை நினைவூட்டுகின்றன.

ரங்க மண்டபத்தின் சிறப்பு

இந்த ரங்க மண்டபத்தில் தான் 2 சிம்ம தூண்கள் காணப்படுகின்றது. ரங்க மண்டபத்தின் வடக்குப் பகுதியில் முருகன் வள்ளி, தெய்வானையுடன் காட்சி தருகிறார்.

சிம்மத் தூண்களின் மூலம் கோயிலின் காலம்

பலர் இந்த சிம்மத்தூண்களை பார்த்த மாத்திரத்திலேயே இவை ராஜசிம்மன் காலம் என்று குறித்து விடுகின்றனர். ஆனால் பல்லவ பேரரசன் முடிவுக் காலம் மற்றும் சோழப்பேரரசின் ஆரம்பகால கட்டத்திலும் இதே போன்ற தூண்கள் காணப்படுகின்றன என்று திரு. நீலகண்ட சாஸ்திரி அவர்கள் சோழர்கள் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

திருச்சுற்று மாளிகை

கருவறையைச் சுற்றியுள்ள திருச்சுற்றுமாளிகையில் மொத்தம் தூண்களின் எண்ணிக்கை 33 ஆகும். இத்தூண்களின் அமைப்பு அர்த்தமண்டப தூணைகளை ஒத்துள்ளது. இத்திருச்சுற்று மாளிகைச் சுவரில் சோழர்கால ஓவியம் இருந்தது முதன்முதலில் இந்நூலாசிரியரால் கண்டறியப்பட்டது. திருச்சுற்று மாளிகையில் 1. தென்மூலையில் ஆவுடையார் மீது பிரதிஷ்டையின்றி விநாயகர் வீற்றிருக்கிறார். 2. சந்தனம் அரைக்க பயன்படும் கல் உள்ள

மேடை உள்ளது. 3. மேற்கு கோட்டத்தில் மகாவிஷ்ணுவிற்கு எதிரில் முருகன் மயிலுடன் அமைந்துள்ளது. 4. மகாவிஷ்ணுவிற்கு எதிரில் உள்ள திருச்சுற்று தூண் ஒன்றில் நரசிம்மன் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. 5. சண்டிகேஸ்வரர் சிற்பம் திருசுற்று மாளிகையின் வடக்குப் புறத்தில் நடைமேடையில் உள்ளார். 6. ஒரு சிறிய மண்டபம் திருச்சுற்று வடக்கில் காணப்படுகிறது.

உள் திருச்சுற்று மாளிகையும் நாயன்மார்களும்

உள் திருச்சுற்று மாளிகையில் உள்ள சோழர் காலத் தூண்கள் ஒவ்வொன்றிலும் நாயன்மார்களின் பெயர்கள் 11-ஆம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்து வடிவில் பொறிக்கப்பட்டுள்ளன. அந்தப் பெயர்களில் சில பின் வருமாறு :

1. கண்ணப்பர்
2. சிறுதொண்டர்
3. எறிபத்தர்
4. மெய்ப்பொருள்
5. இயற்பகை
6. விறல் மீண்டார்
7. திருநீலகண்டப் பெருங்குயவர்
8. அரிவாட்டாயர்
9. அப்பூதி அடிகள்
10. ஏனாதி நாதன்
11. மானக் கஞ்சர்
12. குங்கிலிக் கலையர்
13. அமர் நீதி என்ற சைவப் பெரியார்களின் பெயர்களையும்
14. சிவபாத சேகரர் (முதலாம் இராஜராஜன்)
15. கண்டராதித்தர் போன்ற பேரரசர்களின் பெயர்களையும் இறைவன் பெயராகிய திருப்புலியார் என்னும் பெயர்களையும் அத்தூண்களில் காணலாம்.

மகா மண்டபம்

அர்த்த மண்டபத்திற்கு அடுத்து வரும் பகுதி இந்த மண்டபம் இடதுப்புறம் $2 \times 5, 1 \times 4 - 14, \ 2 \times 5, 1 \times 2 - 12$ ஆக மொத்தம் 26 முற்கால சோழர் கால தூண்களைப் பெற்றுள்ளது. இந்த தூண்கள் அர்த்த மண்டபத் தூணின் அமைப்பை ஒத்து காணப்படுகின்றன.

மகா மண்டபத்தில் உள்ள உதிரிசிற்பங்கள்

1. விஷ்ணு துர்க்கை 2. பைரவர் 3. சூரியன், சுந்தரர், திருநாவுக்கரசர் கிழக்கு சுவர் ஓரமாக மேற்கு நோக்கி உள்ளனர். 4. நவக்கிரஹும் இடது புறமண்டபத்தின் நடுவில் உள்ளது. 5. முருகன் வள்ளி தெய்வாணையுடன் கணபதி அர்த்த மண்டப வெளிப்புற வாயிலில் அமைந்துள்ளனர்.

நவக்கிரகம்

நவக்கிரக ஸ்தாபனம்

கேது குரு புதன்

சனி சூரியன் சுக்கிரன்

ராகு செவ்வாய் சந்திரன்

நவகிரகங்களும் அவற்றின் வடிவமும்

வ.எண்	நவக்கிரகபெயர்	வடிவம்
1.	சூரியன்	வட்டம்
2.	சந்திரன்	சதுரம்
3.	செவ்வாய்	முக்கோணம்
4.	புதன்	அரசிலை வடிவம்
5.	குரு	செவ்வகம்
6.	சுக்கிரன்	5 கோணம்
7.	சனி(நி)	ஓடம்

8.	ராகு	முறம்
9.	கேது	கொடி

நவகிரகங்களும் அவற்றின் வாகனம்

வ.எண்	நவக்கிரகபெயர்	வாகனம்
1.	சூரியன்	7 குதிரைகள் பூட்டிய ஒரு சக்கரத்தேர்
2.	சந்திரன்	10 குதிரைகள் பூட்டிய இரண்டு சக்கரத்தேர்
3.	செவ்வாய்	செம்மறி ஆடு
4.	புதன்	சிம்ம வாகனம்
5.	குரு	குதிரை வாகனம்
6.	சுக்கிரன்	வெண்ணிறக் குதிரை
7.	சனி(நி)	காக்கை வாகனம்
8.	ராகு	சிம்ம வாகனம்
9.	கேது	புறா வாகனம்

இந்த ஒன்பது பேரும் ஒன்பது கிரகங்களின் தேவதைகளாக அந்தந்த கிரகங்களிலேயே இருந்து மேரு மலையை மையமாக கொண்டு விண்வெளியில் சுழன்று வருகிறார்கள். இவர்களில் சூரியன் முதலிய எழுவர் வலமாகவும் இராகு, கேது எனும் இருவர் இடமாகவும் சுழல்கின்றனர். இவர்கள் தம்மை வழிபடுவோர்க்கு நற்பலனை அளிக்கின்றனர்.

திருஞான சம்பந்தர்

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல அலை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

எனக்கூறியுள்ளார்.

முன்மண்டபம்

1. உற்சவர் அறை முன் மண்டபத்தின் கிழக்கு மூலையில் உள்ளது. 2. பூஜை பொருட்கள் வைக்கும் அறை முன் மண்டபத்தின் தெற்கு மூலையில் உள்ளது. 3. ஒலி, ஒளி பெருக்கி அறை வடக்கு மூலையில் உள்ளது. 4. பிரதோச வாகனம் வலதுப்புற மண்டபத்தின் மத்தியல் உள்ளது. 5. மயில், குதிரை, நந்திவாகனம் மண்டபத்தின் கிழக்கு மூலையில் உள்ளது. 6. விநாயகர், நாகர்சிலைகள் மகா மண்டபத்தின் வெளிப்புற வாயிலில் இடது, வலது புறம் உள்ளது. 8. மகிசாசுரமர்த்தினி, காலபைரவர் மகா மண்டப வெளிப்புற வாயிலில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளன. 10. உண்டியல் முன் மண்டப நடைபாதையின் நடுவே உள்ளது.

வெளித் திருச்சுற்று மண்டபம்

முன் மண்டபத்திற்கு அடுத்து வரும் பகுதி இந்த வெளி திருச்சுற்று மண்டபம் 16 கால்களை உடையது. 16 வகை செல்வங்களை குறிக்கவே இந்த 16 கால்கள் என்று கூறப்படுகிறது.

வெளித் திருச்சுற்று மண்டப தூண்களில் உள்ள புடைப்பு சிற்பங்கள்

1. புலி லிங்கத்தைப் பூசித்தல்
2. பசு லிங்கத்தைப் பூசித்தல்
3. உமை லிங்கத்தை தழுவி வெள்ளத்திலிருந்து காத்தல்
4. கண்ணப்பர் தன் கண் அப்பி லிங்கத்தை துதித்தல்
5. மகிசாசூரமர்த்தினி
6. கங்காளமூர்த்தி
7. அனுமன்
8. நரசிம்மர்
9. யானை மீதமர்ந்த இந்திரன்
10. காலனை வதைக்கும் மூர்த்தி

11. தேரில் உற்சவர் வலம் வரும் காட்சி
12. யக்சி உருவம்

படிகள்

இந்த திருச்சுற்று மண்டபம் 5 படிகளை கொண்டு உள்ளது.

வெளி திருச்சுற்று மாளிகையில் கல்வெட்டுகள்

இந்த வெளித்திருச்சுற்று மண்டபம் முன் மண்டபத்தோடு இணைத்து கட்டப்பட்டுள்ளது. இதன் இடப்புற சுவரில் கல்வெட்டுகளில் உள்ள கற்கள் மாறி மாறி வைத்தக் கட்டப்பட்டுள்ளதை காணும் போது முன்பு இருந்த கோயிலை புதுப்பித்து கட்டியது போல எண்ணத்தோன்றுகிறது.

இதன் வலதுப் பக்க சுவற்றில் அன்றைய மன்னர்கள் இக்கோயிலுக்கு அளித்த தானம் குறித்த கல்வெட்டுகள் காணப்படுகின்றன. ஆனால் அவை தற்பொழுது மறைக்கப்பட்டு இன்றைய காலகட்டத்தில் கோயிலுக்கு தானம் வழங்கியோரின் கல்வெட்டுகள் வைக்கப்பட்டுள்ளன.

யாகசாலை

கோயிலினுள் வடக்கு மூலையில் உள்ளது. மிகப்பெரிய கட்டட அமைப்பை உடையது. எப்பொழுது வேண்டுமானாலும் இடிந்து விழும் நிலையில் உள்ளது. உள்ளே ஒரு கிணறு காணப்படுகிறது.

வியாக்ரபாத சித்தர் சன்னதி

ஒரு சிறிய மண்டப அமைப்பினை போன்றுள்ளது. உள்ளே ஒரு சிவலிங்கம் மட்டுமே காணப்படுகிறது. மிக எளிமையான கட்டட அமைப்பு.

அமிர்தகுசலாம்பாள் (அ) அபிதகுசலாம்பாள் ஆலயம் அமைவிடம்

வியாக்ரபுரீஸ்வரர் ஆலயத்தினுள் தெற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இக்கோயில் பத்ம பீடம், கண்டம், கம்பு ஆகியவற்றுடன் கூடிய உபபீடம், உபானம், ஜகதி, முப்பட்டைக்குமுதம், கண்டம், கம்பு, பட்டிகை, பித்தி ஆகிய பொதுவான அதிட்டான அமைப்பை உடையது. கருவறை, உள்ளாலை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், முன்மண்டபம், திருச்சுற்று மாளிகை ஆகிய பொதுவான அமைப்பினை இது கொண்டுள்ளது. முன்மண்டபத்தின் வலது பக்கத்தில் 1. மூன்று லிங்க உருவங்கள் பிரதிட்டையின்றி உள்ளது. 2. அதே சுவரில் விநாயகர் உருவம் ஒன்று புடைப்புச் சிற்பமாக இருக்கிறது. அம்மன் சன்னதியின் மேற்கு பாகத்தில் திருச்சுற்றில் பல தெய்வங்களுக்கு சன்னதிகள் இருந்து அழிந்து போனதற்கான அடையாளம் பல இருக்கின்றன.

இராசகோபுரம்

பத்மபீடம், கண்டம், கம்பு ஆகியவற்றுடன் கூடிய உபபீடம், உபானம், ஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், ஜம்பு, பட்டிகை, பித்தி போன்ற அடிப்படை அமைப்புக்களை பெற்றுள்ளது. அமைப்பு மிகப்பெரிய அடித்தளம் அமைப்பை பெற்றிருந்தும் மிகச் சாதாரணமாக மூன்று நிலை கோபுர அமைப்பை பெற்று இருப்பது இத்திருக்கோயிலுக்கு மிகப் பெரிய ராசகோபுரம் எடுக்க திட்டமிட்டு இருந்ததும் சில காரணங்களால் அவை தடைப்பட்டு போயிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. ராசகோபுரத்தின் வடக்கு பகுதியில் தட்சிணாமூர்த்தி, தெற்குப் பகுதியில் பிரம்மா, மற்றும் கிழக்கு, மேற்கு பகுதிகளில் மூன்று நிலைகளிலும் துவாரபாலகர்களும், ராசகோபுரத்தின் உச்சியில் 4 புறமும் நந்தியும் காணப்படுகிறது. இதைத் தவிர வேறு சிற்பங்கள் காணப்படவில்லை. கல்வெட்டைக்கொண்டு விசயநகர் காலம் என கருதபடுகிறது.

நூற்றுக் கால் மண்டபம்

ராசகோபுரத்திற்கு வெளியே தெற்கு திசையில் உள்ளது. இது தேர் வடிவம் கொண்ட 100 கால் மண்டபம் தற்பொழுது மிகவும் சீரழிந்த நிலையில் காணப்படுகிறது.

மகாபாரத போரில் கர்ணனுடைய இரதம் பள்ளத்தில் சிக்கி அதன் பொருட்டு அவன் உயிர் பிரிந்தது. அதே போன்ற நிலையிலேயே பாதி சக்கரத்திற்கு மேலே மண் முடிய நிலையில் பரிதாபகரமான நிலையில் உள்ளது.

நந்தி மண்டபம்

ராசகோபுரத்திற்கு வெளியே காணப்படுகிறது. இதற்கு பின் கொடி மரம் இல்லாத பீடமும் அதற்கு பின்பு பலி பீடமும் காணப்படுகின்றது.

வியாக்ரபாத தீர்த்தம்

வியாக்ரபுரீஸ்வர ஆலய தீர்த்தம் இராசகோபுரத்திற்கு வெளியே நந்தி மண்டபத்திற்கு கிழக்கு பகுதியில் காணப்படுகிறது. மக்களின் குடிநீர் ஆகவும் பயன்படுகிறது.

வியாக்ரபுரீஸ்வரர் ஆலயத்தில் உள்ள செப்புத் திருமேனிகள்

1. விநாயகர்
2. நடராஜர் சிவகாமியுடன்
3. முருகன், வள்ளி, தெய்வானையுடன்
4. பிரதோச நாயகர் துணைவியுடன்
5. சோமாஸ்கந்தர்
6. மாணிக்கவாசகர்
7. வீரபாகு
8. சந்திரசேகர் துணைவியுடன்
9. வேளாத்தம்மன் (கிராம தேவதை)
10. தனி அம்மன்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள செப்புத் திருமேனிகளில் வேளாத்தமமன் ஊரில் உள்ள வேறு கோயிலில் இருந்து எடுத்து வந்து பாதுகாப்பிற்காக இங்கு வைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இந்த அம்மனுக்கு தனிக்கோயில் கட்டப்பட்டு வருகிறது.

சிறப்புச் செய்திகள்

சிம்ம தட்சிணாமூர்த்தி இங்குள்ள தட்சிணாமூர்த்தி அர்த்தநாரீ வடிவம் என அர்ச்சகரால் அடையாளம் காட்டப் படுகிறார். ஆனால் அவ்வடிவம் அர்த்தநாரீ வடிவம் இல்லை. மேலும் இடது காலின் கீழ் சிம்மமும், வலதுக்காலின் கீழ் முயலகனும் காணப்படுவதன் காரணமாக இவர் சிம்ம தட்சிணாமூர்த்தி என அழைக்கப்படுகிறார். மேலும் இவர் காலின் கீழ் காணப்படும் சனகாதி முனிவர்கள் இவரின் பக்கவாட்டுச் சுவரில் காணப்படுகின்றனர்.

மேலும் பக்கவாட்டு சுவரின் உச்சியில் இருபுறமும் துவாரபாலகர்கள் புடைப்புச் சிற்பங்களாக உள்ளனர். இவர்களும் தங்களது இறைவனை போன்றே ஒருவர் புலியையும் மற்றொருவர் சிங்கத்தையும் வாகனமாக கொண்டுள்ளனர்.

இந்த சிம்ம தட்சிணாமூர்த்தி பஞ்ச கோட்ட தெய்வங்களில் ஒன்று. இங்குள்ள தட்சிணாமூர்த்தி திருவுருவம் விசயநகர் காலத்தை சேர்ந்தது. அவர்கள் காலத்தில் தான் பஞ்ச கோட்ட தெய்வம் என்ற நிலையில் இருந்து தனி கோயில் போன்ற அமைப்பைப் பெற்றது.

மற்றொரு சிறப்பு சூரிய பகவான் திருவுருவம் அமைவிடம் மகாமண்டப தெற்கு மூலையில் உள்ளது.

சிறப்புத் தன்மை நேரிடையாக சூரியனின் ஒளி இதன் மீது படுவது கிடையாது. மேற்கு புறம் உள்ள ஒரு சுவரில் ஒரு பெரிய சாளரம் மட்டுமே காணப்படுகிறது. சூரிய ஒளியின் பிரதிபலிப்பு மட்டுமே இந்தச் சிலை வரை பரவுகிறது. அவ்வாறு பரவும் பொழுது காலை முதல் மாலை வரை இந்த ஒளி பிரதிப்பலிப்பினால் சுவரில் விழும் நிழல் அங்கும் இங்கும் ஆடாது அசையாது ஓரே இடத்தில் காணப்படுகிறது.

❖✡❖

அரசியல்

முதலாம் இராசேந்திர சோழன் (கி.பி. 1012-1044)

தாய் தந்தையர்	-	இராசராசன் - திரிபுவன மாதேவியார்
பிறந்த மாதம்	-	மார்கழி திங்கள்
நட்சத்திரம்	-	திருஆதிரை
இயற்பெயர்	-	மதுராந்தகன்

என திருவாலங்காடு செப்பேடுகள் கூறுகின்றன. இளவரசன் ஆன காலம் இராசராசன் நான்காம் ஆண்டு கல்வெட்டில் - (கி.பி. 988) "இராசேந்திர சோழ தேவன்" என்று குறிப்பிட்டு உள்ளன. ஆட்சி செய்த ஆண்டுகள் சுமார் 30 ஆண்டுகள்.

நாட்டு நிலை

இராசேந்திரன் பட்டம் பெற்ற காலத்தில் (கி.பி.1012)-இல் சோழப் பேரரசு வடக்கே கிருஷ்ணா முதல் துங்கபத்திரை வரை பரவி இருந்தது. சோழ நாடு புதிதாக வென்ற பகுதிகளை ஆள நம்பிக்கையான அதிகாரிகள் இருந்தனர். பேரரசிலும் அமைதி நிலவியது.

தன்னுடைய ஏழாவது ஆட்சியாண்டில் தன் மகன் இராசகேசரி என்பார்க்கு முடிச்சூட்டினார். அது முதல் தந்தையும் மகனும் ஏறத்தாழ 25 ஆண்டுகள் ஒன்றாக அரசாண்டனர். இராசேந்திரன் தன் மற்றொரு மகனை சடாவர்மன் சுந்தரசோழ பாண்டியன் என பெயரிட்டு பாண்டிய நாட்டில் நியமித்தான். இவர் சேர நாட்டையும் ஆளும் உரிமை பெற்றதனால் 'சோழ கேரளன்' எனப்பட்டார்.

போர்ச்செயல்கள்

இராசேந்திரன் காலத்து போர்ச்செயல்கள் மூன்று வகைப்படும். அவை 1. இவர் இளவரசராக இருந்து நடத்தியவை. 2. அரசராக இருந்து நடத்தியவை. 3. இவருடைய காலத்தில் இவரது மகன் இளவரசர் இராசாதிராசன் நடத்தியவை.

இளவரசாக இருந்து நடத்திய போர்கள் 1. சேர பாண்டியருடன் போர், 2. மலைநாட்டுப் போர், 3. கொல்லம் மேற்கரை நாடுகள், 4. கலிங்க நாடு ஆகியன குறிப்பிடத்தக்கவை.

அரசராக இருந்து நடத்தியவை

1. இடைதுறை நாடு
2. கொள்ளிப் பாக்கை
3. மண்ணைக் கடக்கம்
4. ஈழப்போர்
5. சாளுக்கியப் போர்
6. கங்கைக் கொண்டான்
7. கடாரம் முதலியன.
8. மீண்டும் ஈழப்போர்

9. பாண்டியருடன் போர், மலைநாட்டுப்போர், மேலைச் சாளுக்கிய போர் ஆகியனவும் குறிப்பிடத்தக்கவை.

கொடை

இவர் 1073 பேருக்கு கொடை அளித்ததை கரந்தை செப்பேடு கூறுகிறது. கூழம்பந்தல் கங்கைக் கொண்ட சோழீஸ்வரர் கோயிலுக்கு 2250 கலம் நெல்லும் 65 கழஞ்சு பொன்னும் வழங்கினார். திருவாலங்காட்டு சிவன் கோயிலுக்கு பழையனூரை கொடையாக வழங்கினார். காமவல்லிக் கோயிலுக்கு நிலதானம் செய்தார்.

இவர் கட்டுவித்த கோயில்கள் ஈழநாட்டு மாத்தோட்டம் கோயில், திருவொற்றியூர் ஆதிபுரிஸ்வரர் கோயில், குனிகல் அருகே கொத்தகரே கோயில், தொட்டமளூர் கோயில், பஞ்சவன் மாதேவீச்சுரம், சோழச் சிற்றரசன் எழுப்பிய இராசேந்திர சோழ

விண்ணகர் மற்றும் பெருவுடையார் கோயிலுக்கு இணையான கங்கைகொண்ட சோழபுரம் பெருவுடையார் கோயில் ஆகியன குறிப்பிடத்தக்கன.

இறுதிக்காலம் இவர் தன் 83-ஆம் வயதில் (கி.பி. 1044-இல்) உயிர் நீத்தார். இவருடன் இவர் மனைவி வீரமாதேவியும் உடன்கட்டை ஏறினாள்.

முதலாம் குலோத்துங்க சோழன்(கி.பி. 1070-1124)

கீழை சாளுக்கிய மன்னனாகிய இராசராச நரேந்திரனின் மகன் இவன் தாய் முதலாம் இராசேந்திரனின் புதல்வி அம்மங்கை ஆவாள். இவன் பிறப்பதற்கு சில திங்கள் முன் இராசேந்திரன் இறந்ததால் இவன் இப்பெயர் பெற்றான் எனத்தெரிகிறது.

வீரராசேந்திரனுக்கு பிறகு ஆண்ட அதிராசேந்திரன் நோய்வாய் பட்டு இறந்தான். நாட்டை ஆள அதிராசேந்திரனுக்கு வாரிசு இல்லாததால் சோழ நாடு அல்லல் உற்றது. வடபுலத்தில் போர் புரிந்து கொண்டிருந்த குலோத்துங்கன் இதனை அறிந்து மகள் வயிற்று பேரன் என்ற உரிமை கொண்டு சோழ ஆட்சியை ஏற்றான்.

ஆட்சி ஏற்ற ஆண்டு கி.பி. 1070-ஆம் ஆண்டு சூன் திங்கள் ஒன்பதாம் நாள். அபிடேகப் பெயர் குலோத்துங்கன், பட்டப்பெயர் இராசகேசரி. ஆட்சி செய்த ஆண்டுகள் 50 ஆண்டுகள் என கருதப்பெற்றது. ஆனால் தர்மபுரி மாவட்டம் ஓசூர் அருகில் உள்ள கைலாவரம் என்ற ஊர் நடுகல் கல்வெட்டு இம்மன்னன் 54 ஆண்டுகள் ஆட்சி செய்தான் என்று கூறுகிறது.

திரிபுவனச் சக்கரவர்த்தி இந்த பட்டம் சூடிய முதல் சோழ மன்னன் இவனுடைய ஐந்தாம் ஆண்டு கல்வெட்டுகளில் இப்பெயர் காணப்படுகிறது. மனைவியர் பட்டத்தரசி மதுராந்தகி இரண்டாம் இராசேந்திர சோழனின் மகள். உடன் பிறந்தோர் குந்தவை, மதுராந்தகி என சிதம்பரம் கல்வெட்டு கூறுகிறது. மக்கள் முத்தவன் சோழகங்கன், இராசராசன், வீரசோழன், விக்கிரம சோழன்.

கல்வெட்டுத் தொடக்கம்

திருமன்னி வளர, திரு மன்னி விளங்க

பூமேல் அரிவையும், பூ மருவிய திரு மடந்தையும்

புகழ் மாது விளங்க, புகழ் சூழ்ந்த புணரி, பூ மேவி வளர

முதலிய தொடக்கங்களை உடையன.

முக்கிய போர் நிகழ்ச்சிகள்

அதிராசேந்திரன் இறப்புக்கு பிறகு கை நழுவிய ஈழத்தை கைக்கொண்டான்.

மேலைசாளுக்கியப் போர்

நங்கலியப் போர்

பாண்டியருடன் போர், கி.பி. 1081-இல் தமது 11-ஆவது ஆட்சியாண்டில் சேரருடனான போர், கி.பி. 1096-இல் வடகலிங்க போர், கி.பி. 1112-இல் குலோத்துங்கன் மேற்கொண்ட வடகலிங்கபோர் ஆகியன பற்றி குலோத்துங்கனுடைய மெய்க்கீர்த்திகள் சீனிவாசநல்லூர், ஆலங்குடி ஆகிய ஊர் கல்வெட்டுகள் கூறுகின்றன.

நிர்வாகம்

கி.பி. 1076-இல் சோழ நாட்டில் இருந்த நிலங்களைக் அளக்கவும், வகைப்பிரித்து அதன் அடிப்படையில் வரி விதிக்கவும் நடவடிக்கை மேற்கொண்டார். 'சீபாதக்கோல்' என்னும் அளவுக்கோல் பயன்படுத்தப்பட்டது. குலோத்துங்கசோழப் பேரேரி, இராசேந்திர சோழப் பேரேரி ஆகியன வெட்டப்பட்டன.

பிற பணிகள்

மன்னார்குடியில் உள்ள இராசகோபால சுவாமி கோயில் இவரால் எழுப்பப்பட்டது. நாகையில் கடார அரசன் கட்டிய பௌத்த பள்ளிக்கு விளைநிலங்களையும், ஊர்களையும் இறையிலியாக அளித்தான். தஞ்சை மாவட்ட சூரியனார் கோயில், கொற்கை சிவன் கோயில் ஆகியன இவரால் கட்டப்பட்டவை. பிரமதேயம் ஒன்றை கங்கபாடி நாட்டில் 108 சதுர்வேதி

பட்டர்களுக்கு அளித்தான். சேரன்மாதேவி பக்தவத்சலன் ஆலய பாதுகாப்பிற்கு மூன்று கைமா சேனை படையை நிறுவினான்.

இறுதிக்காலம்

குலோத்துங்கன் கி.பி. 1120-இல் உயிர் துறந்தார். தேவையற்ற போர்களை நீக்கிக் குடிமக்களின் தேவைகளை கவனித்தார். அவருடைய ஆட்சியிலும் அதற்கு பின்னரும் ஒரு நூற்றாண்டுக் காலத்திற்கு அமைதி நிலவியது என்று சாஸ்திரியார் குறிப்பிடுகிறார்.

விக்கிரம சோழன்

இவர் குலோத்துங்க சோழரின் இளைய மற்றும் நான்காம் மகன் இளமையில் வேங்க நாட்டில் அரசப் பிரதிநிதியாக இருந்தார். கி.பி. 1120-இல் பரகேசரி எனும் பட்டம் சூட்டிக் கொண்டார். இவருடைய தந்தையின் ஆட்சிக் காலத்திலேயே இவரின் மூத்த உடன் பிறப்புக்கள் இறந்ததால் அரியணை ஏறினார். கி.பி.1118-இல் குலோத்துங்க சோழன் இவருக்கு இளவரசு பட்டம் சூட்டினார்.

இவரின் பிறந்த நாள் ஆனித்திங்கள் மற்றும் நட்சத்திரம் உத்திரட்டாதி

மெய்க்கீர்த்திகள் : *1. பூமாது புவிமாது வளர, பூமகள் புணர புவி மாது வளர, 2. பூமாலை மிடைந்து பொன் மாலை திகழ.*

விக்கிரம சோழனின் சிறப்புப் பெயர்கள் 1. தியாக சமுத்திரம், 2. அகளங்கன், 3. தியாகவராகரா, தியாகசமுத்திரச் சதுர்வேதி மங்கலம், அகளங்கபுரம் என்ற பெயரில் ஊரும் வழங்கப்படுகிறது. இவரின் மனைவியர் 1. முக்கோக்கிழானடிகள் - பட்டத்தரசி. இவர் இரண்டாம் குலோத்துங்களின் தாய். 2. தியாகபாதகை, 3. நேரியன் மாதேவி.

இழந்தவற்றை மீட்டல்

தந்தையின் காலத்தில் இழந்த வேங்கியை மீட்டார். கி.பி.1127-இல் கொல்லிப்பாக்கைத் தலைவன் மகா மண்டலேஸ்வரன் இவருக்கு அடங்கியதையும், கி.பி.1135-இல்

எல்லாநாட்டுத் தலைவர்கள் இவரின் தலைமை ஏற்றதையும் கல்வெட்டுகளின் மூலம் அறியலாம். இதே போல் தந்தையின் காலத்தில் இழந்த கங்கபாடியின் ஒரு பகுதியினை மீட்டார். இவர் நுளம்பன் உலோகிசுரமுடைய மாதேவர்க்கு ஒரு விமானம் அமைத்ததாக அதே மாவட்டத்தை சேர்ந்த கல்வெட்டுகள் கூறுகின்றன.

திருப்பணிகள்

சிதம்பரம் நடராஜர் கோயிலில் பல திருப்பணிகளை செய்தார். இது கி.பி. 1128-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முற்றுப் பெற்றது. தில்லை திருக்கோயில் திருச்சுற்று மாளிகை, கோபுர வாசல் கூடசாலைகளும், பலிபீடமும் பொன் வேயப்பட்டன. 100 கால் மண்டப தூண்களில் 12-இல் இவர் பெயர் காணப்படுவதால் அதுவும் இவரால் அமைக்கப்பட்டது எனலாம்.

இராமபிரானுக்கு கோயில் எடுத்ததாகவும் ஐந்தாம் திருச்சுற்று எடுத்தார் என்றும் கோயிலொழுகு கூறுகின்றது.

ஒட்டக்கூத்தர் இவரின் அவைக்களப்புலவர். ‘விக்கிரம சோழன் உலா’ எனும் உலாப்பாடலை பாடினார். கங்கை கொண்ட சோழபுரம் இவரின் தலைநகர். இவர் கி.பி. 1135-இல் இறந்தார்.

இரண்டாம் குலோத்துங்கன் 1133 - 1150

இவர் கி.பி.1133-இல் பட்டம் சூட்டப்பெற்று கி.பி.1135-இல் அரியணை ஏறினார்.

மெய்க்கீர்த்திகள் :-

1. பூமன்னு பாவை
2. பூமன்னு பதுமம்
3. பூமன்னு யாணர்
4. பூமருவிய புவியேழும்
5. பூ மேவிய வளர்
6. பூ மேவு திருமகள்

என தொடங்கும் மெய்க் கீர்த்திகள் இவருடையது.

சிறப்புப் பெயர்கள் :-

1. அபயன்
2. அனபாயன்
3. எதிரிலிப் பெருமாள்
4. கலிகடிந்த சோழன்
5. திருநீற்றுச் சோழன்
6. பெரிய பெருமாள்

ஆகியன இவரது சிறப்புப் பெயர்கள் ஆகும்.

மனைவியர்

1. தியாகவல்லி - பட்டத்தரசி
2. முக்கோகிழானடி

இரண்டாம் குலோத்துங்கன் மகன் இரண்டாம் இராசராசன் ஆவார்.

தில்லைப் திருப்பணிகள்

1. தில்லையில் இவர் செய்த திருப்பணிகளைக் 1. குலோத்துங்க சோழனுலா, 2. இராசராச சோழனுலா, 3. தக்கயாகப் பரணி ஆகிய நூல்களில் ஒட்டக்கூத்தர் விளக்கிக் கூறியுள்ளார்.

கிருமி கண்ட சோழன்

தில்லைக் கோயிலில் இவர் திருப்பணிகளை மேற்கொண்ட பொழுது முற்றத்தை விரிவு செய்ய பெருமாள் உருவம் தடையாக இருந்ததால் அதை அகற்ற பணிந்தார். வைணவர்கள் இவர் பணிக்கு தடை விளைவிக்கவே இவர் பெருஞ்சினம் கொண்டு பெருமாளை கடலில் விட்டார். அதனால் திவ்ய சூரி சரிதம், கோயிலொழுகு ஆகிய நூல்கள் இவரை கிருமி கண்ட சோழன் என்கின்றன. இவருடைய ஆட்சியின் 16, 17-ஆம் ஆண்டு கல்வெட்டு காணப்படுவதினால் இவர் கி.பி.1150 வரை அரசாண்டு அவ்வாண்டிலேயே இறந்தான் எனலாம்.

இரண்டாம் இராசாதிராசன் 1166-80

விக்கிரம சோழனின் வாரிசும் நெறியுடைப் பெருமாளின் மகனுமான எதிரிலிப் பெருமாள் கி.பி.1163-இல் பட்டம் சூட்டப்பெற்று கி.பி.1166-இல் இராசாதிராசன் என்ற பெயர் பெற்றான். சிறப்புப் பட்டப்பெயர் இராசகேசரி.

மெய்க்கீர்த்திகள் :-

1. கடல் சூழ்ந்த பார் மாதரும்
2. கடல் சூழ்ந்த பாரேழும்
3. பூ மருவிய திசை முகத்தோன்

இவை வரலாற்றுக்கு உதவுபவை என கூற இயலாது.

கல்வெட்டுகளில் காணப்படும் சிறப்புப் பெயர்கள்

1. கரிகால் சோழன்
2. திரிபுவன சக்கரவர்த்திகள்

போர் நிகழ்ச்சிகள் :-

இவருடைய காலத்தில் பாண்டிய நாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட பாண்டியர்கள் ஆட்சி செலுத்தினர். சடையவர்மன் காலத்தில் இவர்களுடைய உறவில் விரிசல் ஏற்பட்டது. பராக்கிரம பாண்டியனுக்கும், சடையவர்மன் குலசேகரனுக்கும் ஏற்பட்ட போரில் பராக்கிரம பாண்டியன் கொல்லப்பட்டு அவர் மகன் வீரபாண்டியன் காட்டில் மறைகிறான். வீரபாண்டியனுக்கு ஆதரவாக இலங்கை அரசன் பராக்கிரமபாகு குலசேகர பாண்டியனுக்கு எதிராய் போரிட்டார். குலசேகர பாண்டியன் இரண்டாம் இராஜாதிராஜனின் உதவியை வேண்ட தம் அமைச்சர் தலைமையில் பெரும்படை அனுப்பினார். சோழர்படை முதலில் தோற்றாலும் பின்பு வென்றது.

பின்பு சோழருக்கு எதிராய் ஈழப்படை தயாராவதை அறிந்து ஈழப்படையெடுப்பை நிகழ்த்தி பெரும் அழிவு ஏற்படுத்தி பெரும்

கொள்ளைப் பொருட்களுடன் வேதவனமுடையான் அம்மையப்பனான அண்ணன் பல்லவராயன் திரும்பினான். குலசேகரன் சோழர் செய்த உதவியை மறந்து இலங்கை மன்னனுடன் நட்புக் கொள்ள பல்லவராயன் தலைமையில் மதுரையை வென்று வீர பாண்டியனை அரியணையில் அமர்த்தினார்.

திட்டக்குடி கல்வெட்டு:-

திட்டக்குடியில் உள்ள ஒரு கல்வெட்டு மூலம் உள்நாட்டில் குழப்பம் ஏற்பட்டு இருக்க வேண்டும் என தெரிகிறது.

இறுதிக் காலம்

கி.பி.1166-இல் ஏற்பட்ட உடன்பாட்டை இவர் மீறியதாலேயே ஆந்திரா செல்ல நேரிட்டது. மூன்றாம் குலோத்துங்கன் இவரை ஆட்சியில் இருந்து விரட்டாதது அவரின் பெருந்தன்மையை காட்டுகிறது. ஆந்திராவில் 35 ஆண்டு காலம் வாழ்ந்த இவர் 1215-இல் மறைந்தார்.

மூன்றாம் குலோத்துங்கன் 1178-1218

இரண்டாம் இராசராசனின் மகன், இரண்டாம் இராசாதிராசனுக்கு பிறகு முடிசூட்டப் பெற்றார். பரகேசரி என்னும் பட்டம் சூடி ஆண்டார். என்றாலும் சில கல்வெட்டுகளில் இராசகேசரி என்று தவறாக குறிப்பிடுகிறது. இவர் 40 ஆண்டு காலம் ஆட்சி செலுத்தினார்.

மெய்க்கீர்த்தி

இவருடைய மூன்றாவது ஆட்சியாண்டு முதல் 1. புயல் வாய்த்து வளம் பெறுக என காணப்படுகிறது. இதுவே 2. புயல் வாய்த்து மண் வளர எனவும், 3. புயல் வாய்த்து வளம் பெருக எனவும் சில கல்வெட்டுகளில் மாறுபட கூறுகிறது. இவரது ஆட்சியின் 5-ஆவது ஆண்டு முதல் பூ மருவிய திசை முகத்தோன் எனக் கூறுகிறது.

போர் நிகழ்ச்சிகள்:-

இராசாதிராசனின் உதவிப் பெற்று அரியணை ஏறிய வீரபாண்டியன் இலங்கை மன்னனுடன் நட்புக் கொண்டு சோழருக்கு பகையான சமயத்தில் இராசராதிராஜனால் முன்னர் தோற்கடிக்கப்பட்ட குலசேகரனின் மைந்தன் விக்கிரம பாண்டியன் பாண்டிய நாட்டை தமக்கு பெற்று தர சோழர் உதவியை நாடினான். இதன் விளைவாக கி.பி.1180-இல் போர் ஏற்பட்டது என திருவக்கரை கல்வெட்டு கூறுகிறது. பாண்டியருக்கு இலங்கை மன்னன் பராக்கிரமபாகு உதவினான். குலோத்துங்கன் பாண்டியர்களுடன் போரிட்டு வீரபாண்டியனின் மகன்களில் அருவனைக் கொன்றார். முடிவில் குலோத்துங்கன் மதுரை மாநகரை கைக்கொண்டு விக்கிரம பாண்டியனை மதுரைக்கு அரசனாக்கினார். கி.பி. 1186-இல் மீண்டும் பாண்டியர்களுடன் போர் மேற்கொண்டார். பராக்கிரமபாகு கி.பி.1186-இல் இறந்த பிறகு விஜயபாகு அரசன் ஆனார். அவரும் கொல்லப்பட்டு பராக்கிரமபாகுவின் மருமகன் நிசாங்க மன்னன் இலங்கை அரசன் ஆனார். அவர் தமிழ்நாட்டின் மீது படையெடுத்தார். இராமேஸ்வரத்தில் தங்கி இராமநாத சுவாமி கோயிலுக்கு பல நிவந்தங்கள் வழங்கி திருப்பணி செய்ததால் இறைவன் நிராங்க மல்லீஸ்வரர் என அழைக்கப் பெற்றார்.

குலோத்துங்கனிடம் தோல்வியுற்ற வீரபாண்டியன் சேர நாட்டை அடைந்து உதவி கோரினார். பாண்டியன் சேரன், சிங்களன் ஆகிய மூவரும் கூட்டாக சோழரை எதிர்த்து மதுரைக்கு கிழக்கே உள்ள நெட்டூரில் போரிட்டன. இப்போரில் குலோத்துங்கன் பெரும் வெற்றி பெற்று வீரபாண்டியனின் பட்டத்து அரசியை தன் அந்தப்புரத்தில் பணிப்பெண் ஆக்கினார். இராமேஸ்வரத்தில் நிசாங்க மல்லனை சோழர் படை துரத்தியதுடன் இலங்கையையும் தாக்கி திரும்பியது.

தோற்ற வீரபாண்டியன் மீண்டும் சேர நாட்டை அடைந்து அடைக்கலம் பெற முயன்று முடியாமல் போகவே தன் மகன்களுடன் குலோத்துங்கனிடம் சரணடைந்தான். அவரை

மன்னித்து பாண்டிய நாட்டின் ஒரு பகுதியை வழங்கினார். இப்போர் கி.பி.1188-இல் நடைபெற்றது என நெல்லூரில் உள்ள இவருடைய 10-ஆம் ஆண்டு கல்வெட்டு மூலம் அறிகிறோம்.

கொங்கு நாட்டுடன் போர்:-

பரகேசரி பெருமான் வீரசோழன் என்ற கொங்கு நாட்டு சோழன் கொங்கு நாட்டை ஆண்டு கொண்டு இருந்தார். இவர் சோழருக்கு திறை செலுத்த மறுத்தது மட்டும் இன்றி வீரபாண்டியனுக்கு உதவி செய்யவே குலோத்துங்கன் படையெடுத்து சென்று கொங்கு நாட்டைக் கைப்பற்றினார். வீரகேரளன் என்ற பட்டம் சூடி வென்றவற்றை தோற்றவரிடம் மீண்டும் அளித்து தவறாது திறை செலுத்தி வருமாறு ஆணையிட்டார்.

கொங்கு நாடு - சோழ கேரள மண்டலம்

கருவூர் - முடி வழங்கு சோழபுரம் எனவும் வழங்கப் பெற்றது. பாண்டிய போரில் இவர் ஈடுபட்டிருந்த போது சோழ அரசுகளில் ஒன்றான மகராசபாடி நாட்டை ஆண்ட புசபல வீரன் நல்ல சித்தன் தேவ சோழ மகராசன் தம்மை தனி அரசாக அறிவித்துக் கொண்டு கி.பி.1192-இல் காஞ்சியைக் கைப்பற்றினார். குலோத்துங்கன் அவரை வென்று மகராசபாடி நாட்டை அவரிடமே வழங்கினார்.

இது கி.பி.1194-க்கும் 1197-க்கும் இடையில் நடைபெற்று இருக்க வேண்டும்.

கோப்பெருஞ்சிங்கன்

முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் கி.பி.1216-இல் பாண்டிய மன்னன் ஆனான். இவன் 1219-இல் சோழ நாட்டின் மீது படையெடுத்து அதில் சோழ மன்னனான மூன்றாம் இராசராச சோழனை வென்றான். பின் சில திங்களில் சோழ நாட்டை மீண்டும் அவருக்கே திருப்பி அளித்து விட்டான். காரணம் போசள மன்னர்கள் சோழருக்கு உதவ தயார் நிலையில் இருந்தனர்.

சில ஆண்டுகளுக்கு பின்னர் கி.பி. 1231-இல் முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் மீண்டும் சோழ நாட்டின் மீது படையெடுத்துச் சென்று வென்றான். தோற்ற சோழன் வடபுறம் சென்றான்.

அப்பொழுது தெள்ளாறு என்ற ஊரில் கோப்பெருஞ் சிங்கனால் பிடிக்கப் பெற்று சேந்தமங்கலம் எனும் ஊரில் உள்ள கோட்டையில் சிறை வைக்கப்பெற்றான். நீடுரில் 1231-இல் வரையப்பெற்ற கல்வெட்டு ஒன்று அந்நிலப்பரப்பு இவன் ஆதிக்கத்தில் இருந்தது என தெரிவிக்கிறது.

சோழர் அரசன் சிறை வைக்கப்பட்ட செய்தியை அறிந்த போசள மன்னன் சோழனுக்கு உதவ படை எடுத்து வந்தான். அவனுடைய கண்டநாயகன் கோப்பெருஞ்சிங்கன் இருந்த எள்ளேரியும், சோழக்கோன் இருந்த தொகையூரும் அழித்துக் கோப்பெருஞ்சிங்கனைச் நடுங்கச் செய்து சோழனை விடுவித்தான். இந்நிகழ்ச்சிகள் யாவும் கி.பி.1219-1232-க்கும் இடையில் நிகழ்ந்தது. இவ்விடைப்பட்ட காலத்தில் மிக வலிமையுடன் இருந்தவன் கோப்பெருஞ்சிங்கன்.

இவனின் சமகாலத்தவன் சோழக்கோன். சோழக்கோன் இவர் கோப்பெருஞ்சிங்கனின் நண்பர் ஆவார்.

சம்புவராயர்கள்

தோன்றிய மரபு முன்னூற்றுப் பள்ளி என்ற மரபில் இருந்து உருவானவர்கள்.

சோழப் பேரரசில் இருந்த நிலை:-

படை வீரர்களாகவும், அதிகாரிகளாகவும் இருந்தனர். எழுச்சி பெற்றப் பின் தனி அரசினை உருவாக்கும் நிலைக்கு உயர்ந்தனர். அவ்வாறு உயர்ந்த போது மக்கள் அவர்களை ஏற்றுக் கொள்ளும் வகையில் கண்ணப்பர் குலத்தினர் என தங்களைக் கூறிக்கொண்டனர்.

சம்புவராயர்கள் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சோழப் பேரரசில் இருந்து தங்களை விடுவித்துக் கொண்டு

தனியாட்சி நடத்தும் நிலைக்கு உயர்ந்தனர். மிகக் குறுகிய காலமே அரசியல் எழுச்சி பெற்று ஆட்சி செய்திருந்த போதிலும் எழுச்சி மிக்க காலமாக அது விளங்கியது. இரண்டு பெண்ணை ஆறுகளுக்கு இடையே இவர்களின் கல்வெட்டுக்கள் பொறிப்புகள் 200-க்கு மேல் கிடைத்துள்ளன. இவர்களுடைய கல்வெட்டின் மூலம் அந்நாளைய அரசியல், பொருளியல், சமூகவியல், சமயவியல் ஆகியவற்றை அறிந்து கொள்ளலாம்.

தலைநகரமான 'படைவீடு' போளூருக்கு அருகில் மலைகள் சூழ்ந்த இயற்கை அரனுடன் உள்ளது. சம்புவராயர் ஆண்ட பகுதிகளில் ஒன்று படைவீட்டு ராஜ்ஜியம்.

சம்புவராயர்கள் வாணகோவரையர்கள் ஆண்ட காலத்தில் விஜயநகர் மன்னன் வீர கம்பண்ணன் மூலம் தாக்குதலுக்கு ஆளாகி சம்புவராயர்கள் வீழ்ச்சி அடைந்தனர்.

பிற்காலப் பாண்டியர்கள்:-

கி.பி.900 முதல் 1190 வரையில் ஆண்ட பாண்டியர்கள் ஏறத்தாழ 300 ஆண்டுகள் சோழப்பேரரசுக்கு அடங்கிய சிற்றரசர்களாக இருந்து வந்தனர். ஆயினும் பாண்டியர்கள் வீரம் அடிக்கடி தலையெடுத்த போது சோழர்களால் அடக்கப்பட்டது. மூன்றாம் இராசராசன் காலத்தில் பாண்டியர்கள் வீறு கொண்டு எழுந்தனர்.

முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி.1216-1288)

இவருடைய காலத்தில் சோழ நாடு வெல்லப்பட்டு மீண்டும் சோழருக்கே திருப்பி அளிக்கப்பட்டது. இது நடந்த ஆண்டு கி.பி.1219. மீண்டும் சோழர் - பாண்டியர் கருத்து வேறுபாடு காரணமாக கி.பி.1231-இல் சோழ நாட்டின் மீது மீண்டும் படையெடுத்து சென்று சோழனை வடபுலம் விரட்டினான்.

முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி.1251 - 1271)

இவன் சேர நாட்டை வென்றான். சோழரை வென்று திறை செலுத்த வைத்தான். ஹொய்சாளரை தாக்கி கண்ணனூர்க் கொப்பத்தை முற்றுகையிட்டான். ஹொய்சாளரை வென்றான். இவர் இலங்கை அரசனையும் வென்று யானைகளையும், முடிகளையும் கப்பமாக பெற்றான்.

கோப்பெருஞ்சிங்கனை வென்று அவனுடைய செல்வங்களையும் கவர்ந்து கொண்டான். அவனை தன்னுடைய சிற்றரசன் ஆக்கினார். பின்பு வாணர்களுடைய மகத நாட்டையும், கொங்கு நாட்டையும் தன் ஆட்சிக்கு உட்படுத்தினான் தெலுங்கு சோனை வென்று தொண்டை நாட்டை கைப்பற்றினார். மேலும் வடக்கே சென்று காகீதிய அரசனை வென்று நெல்லூரை கைப்பற்றினார். இவ்வாறு இவர் பல நாடுகளை வென்ற காரணத்தினால் இவர் "எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தர பாண்டியத் தேவர்" என அழைக்கப்பட்டார்.

இறைப்பணி

தில்லைதிருவரங்கத்தில் பல திருப்பணிகளை செய்தார். தில்லையில் உள்ள மேல் கோபுரம் இவர் பெயரால் அழைக்கப்பட்டது. திருவரங்கத்தில் பொன் வேய்ந்து அங்கு முடி சூட்டிக்கொண்டான். பல துலாபார தானங்கள் செய்தான்.

இவரின் சிறப்புப் பெயர்கள் 1. கோயில் பொன் வேய்ந்த பெருமாள், 2. எல்லாம் தலையான பெருமாள், 3. காஞ்சிபுரம் கொண்டான், 4. சேரனை வென்றான்.

சடையவர்மன் வீரபாண்டியன்

சடையவர்ம சுந்தர பாண்டியன் சிதம்பரம் பகுதியில் பிரதிநிதியாக இருந்தான். சடையவர்ம வீரபாண்டியன் கொங்கு பகுதி பிரதிநிதியாக இருந்தவன் சடையவர்ம சுந்தர பாண்டியன் இவர்கள் இருவரும் சகோதரர்கள். பட்டம் பற்றி உண்டான பூசலில் சுந்தர பாண்டியன் தோல்வியுற்றான். அதனால் அவன் அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவனான மாலிக்காபூரிடம் உதவி வேண்டினான். மாலிக்காபூர் படையெடுப்பு பாண்டிய நாட்டின் மீது நிகழ்ந்து பெரும் பொருள் கொள்ளையிடப்பட்டது. அறநிலையங்களும், கோயில்களும் அழிக்கப்பட்டன.

இந்நிலையில் சேர மன்னனான இரவிவர்மன் குலசேகரன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வந்து வீர பாண்டியனையும், சுந்தர பாண்டியனையும் தோற்கடித்து நாட்டின் பல பகுதிகளையும் கைப்பற்றினார். பாண்டியர்களின் சிற்றரசர்களாய் இருந்த 1. சம்புவராயர், 2. வாணாதிராயர் ஆகியோர் சுயேட்சை பெற்றனர்.

தெலுங்குச் சோழர்

தெலுங்கு நாட்டில் பொத்தப்பி, நெல்லூர் ஆகிய இடங்களில் ஆண்டவர்கள் சோழர் என கல்வெட்டுகளில் கூறப்படுகின்றனர்.

அரசியல் தொடர்பு இராசராசன் காலம் முதல் அரசியல் தொடர்பு ஏற்பட்டு இருக்க வேண்டும் என கருதப்படுகிறது.

குலோத்துங்கன் காலம்

முதலாம் குலோத்துங்க சோழன் காலம் முதல் சோழர்-தெலுங்குச் சோழர் தொடர்பு அறிய முடிகிறது.

விக்கிரம சோழன் காலம்

விக்கிரம சோழன் தன் தந்தை இழந்த வேங்கியை தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர உதவியர்களில் முக்கியமானவர் 1. மதுராந்தக பொத்தப்பி சோழ சித்தராசன், 2. விமலாதித்தன், 3. சோமேஸ்வரன், 4. பொத்தப்பி பெத்தராசன், 5. கன்னர தேவனான இராசேந்திர சோழன் ஆவர்.

மூன்றாம் குலோத்துங்க கால தெலுங்குச் சோழர்கள்

1. மதுராந்தக பொத்தப்பி சோழசித்தராசன், 2. வெல நாண்டியிருந்த மகா மண்டலீஸ்வர கொங்கயனான குலோத்துங்க சோழ கொங்க ராசன், 3. குண்டூர் மாவட்டத்து மகா மண்டலீஸ்வர புசபல வீரநல்ல சித்தராச தேவன் ஆவர்.

இரண்டாம் இராசராசன் காலத்தில் தெலுங்கு சோழ சிற்றரசர்கள் சோழருக்கு கட்டுப்பட்டே ஆண்டனர். இரண்டாம் இராசாதிராசன் காலத்தில் இராசேந்திரன் எனும் வெலநாட்டு சிற்றரசர் தனியாட்சி புரிய தலைப்பட்டார்.

கண்ட கோபாலன்

மதுராந்தக பொத்தப்பிச் சோழ திருக்காளத்தி தேவனான கண்ட கோபாலன் மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியின் கீழ் சிற்றரசனாக விளங்கினான். மூன்றாம் இராசராசன் கல்வெட்டுகளில் இவர் மதுராந்தக பொத்தப்பிச் சோழ எனும் சிற்றரசன் திருக்காளத்தி தேவனான கண்ட கோபாலன் என அழைக்கப் பெற்றார்.

இவருடைய பெயருக்கு முன் பிள்ளையார் நாயனார் என குறிப்பிடப்படுகிறார். முதலாம் திக்கன் எனப்பட்டவரும் இவரே. மூன்றாம் இராசேந்திர சோழன் காலத்தில் சம்புவராயருக்கு எதிரான போரில் பங்குப் பெற்றார்போலும் கி.பி.1258 வரை திக்கன் ஆண்டான். கண்டகோபால விண்ணகர் பெருமாள் கோயிலை கட்டினான்.

❖✡❖

சமுதாய பொருளாதாரச் செய்திகள்

பண்டைக் காலத்தில் தொண்டை மண்டலம் பல்வேறு வகையான நிர்வாகங்கள் உருவாக்கப்பட்டிருந்தன.

சங்க காலத்தில் வேளிர் நிர்வாகம் நிலை பெற்றிருந்தது.

வேளிர் ஆண்ட நாடுகள்

1. நன்னன் ஆண்ட வேணாடு
2. இளந்திரையன் ஆண்ட தொண்டை நாடு
3. நல்லியக் கோடன் ஆண்ட ஒய்மா நாடு

ஆகியன வேளிர் ஆட்சி நடைபெற்ற நாடுகள். வேளிர் ஆட்சியின் நிர்வாகம் அதன் அமைப்பால் மிகவும் எளிமையானதாக விளங்கியது.

பல்லவர்கள்

கி.பி.5,6-ஆம் நூற்றாண்டில் பல்லவர்கள் இப்பகுதியை ஆண்டனர். அவர்களுடைய காலத்தில் கோட்டம், நாடு, ஊர் ஆகிய படி நிலைகளில் நிர்வாகம் அமைப்பப் பெற்றிருந்தது.

கோட்டம்

கோட்டம் என்ற பிரிவின் அடிப்படையில் உருவான கோட்டத்தார் சபை இருந்தது. கோட்ட மன்றாடிகள் வைத்திருந்த சபை இருந்தது. நாடு என்ற அரசியல் பூகோள பிரிவு நாட்டார் சபையாலும் எல்லைப்புறத்தில் குடித் தலைவர்களாலும் நிர்வாகிக்கப் பெற்றது.

தொண்டை மண்டலத்தின் கிழக்கு பகுதியில் நாட்டார் நிர்வாகமும், மேற்கு பகுதி எல்லையில் குடித்தலைவர் ஆட்சியும் நிலை பெற்றிருந்தது. ஊர் அளவில் நடைப்பெற்ற நிருவாகம் பற்றியச் செய்தி கிடைக்கவில்லை.

சோழர்கள்

சோழர்கால அரசியல் நிருவாகம் பன்முகப்பட்டதாய் விளங்கியது. முதலாம் ஆதித்தன் காலம் வரை அரசு நிருவாகம் உள்ளாட்சி நிருவாகம் என இருவேறு நிர்வாக அமைப்புகள் உருவாக்கப் பெற்றன.

கோட்ட மன்றாடு

மன்றாடிகள் சபை கோட்ட அளவில் மட்டுமே செயல்பட்டது. நாடு அளவில் செய்லபடவில்லை. மன்றாடிகள் அரசுக்கும் கோயிலுக்கும், கோயில் அதிகாரிகளுக்கும் கொடை பற்றிய வசதி மொழியை அளிக்கின்றனர்.

திருப்புலிவனக் கல்வெட்டுகளில் மன்றாடிகள்

திருப்புலிவனக் கல்வெட்டுகளில் மன்றாடிகள் ஆடு, மாடுகளை பெற்றுக் கொண்டு அவர்கள் மரபினைச் சேர்ந்த இடையர்களுக்கு அளித்து வளர்க்கச் செய்கின்றனர். ஆடு, மாடு வளர்க்கும் இடையர்கள் குழுவினை குடி என்ற பெயரால் அழைத்துள்ளனர்.

ஆடு, மாடு வளர்ப்போர் குழுக்களாக வாழ்ந்தனர் என்பதற்கு இக்கல்வெட்டே சான்று. கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டிருந்தவர்கள் இடையர் என்றும் அம்மக்களிடையே கோட்ட அளவில் சபையாக இயங்கிய குழுவினை மன்றாடிகள் என்ற பெயரால் அழைத்தனர். கோட்ட மன்றாடு என்ற சொல் குறிப்பிடத்தக்கது.

அரசு நிர்வாகத்தில் அதிகாரிகள்

1. அரசன்
2. மந்திரி

3. திருவாய்க்கேள்வி
4. திரு மந்திர ஓலை
5. திரு மந்திரவோலை நாயகம்
6. விடையில் அதிகாரி
7. உடன் கூட்டம்
8. நடுவிருக்கம்
9. புரவு வரித் திணைக்களக் கண்காணி
10. முகவெட்டி
11. வரியிலிடு
12. வரிப் பொத்தகக் கணக்கு
13. பட்டோலை

ஆகிய அதிகாரிகள் இருந்தனர்.

திருமந்திரவோலை - அரசன் அளிக்கும் ஆணையை ஓலையில் எழுதுபவன்.

ஓலை நாயகம் - அவ்வாறு எழுதப்பட்ட ஓலையை படித்து ஒப்புதல் அளிப்பவன்.

இந்த ஆணை நிலையான ஆணையாக மாறும் போது தீட்டு என்று அழைக்கப் பெறுகின்றது.

விடையில் அதிகாரி - ஆணையை நிலையான வரி புத்தகத்தில் எழுத ஆணையிடுகிறான்.

உடன் கூட்டம்

ஆணையை வரிப்புத்தகத்தில் எழுத ஏற்பாடு செய்கிறான். வரிப்புத்தகத்தில் எழுதும் போது 1. நடுவிருக்கை, 2. வரிப்புத்தக அதிகாரி, 3. புரவுவரித் திணைக் களக்கண்காணி, 4. முகவெட்டி, 5. வரிப்புத்தகக் கணக்கு, 6. பட்டோலை ஆகிய அதிகாரிகள்

வரிப்புத்தகத்தில் எழுதும் போது உடன் நிற்பர். நடுவிருக்கையும் ஆணத்தியும் ஒன்று என நீலகண்ட சாஸ்திரி கருதுகிறார்.

தீட்டு எழுதப் பெற்றப் பின் இந்த ஆணைகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுப்பப்பெறும். அவ்வாறு அனுப்பப்பெறும் போது அதற்கு ஸ்ரீமுகம் (அ) திருமுகம் என்று பெயர். அரசாணை உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுப்பப் பெறும் போது அந்த ஆணையை பணிவுடன் வாங்கித் தலை மேல் வைத்துக் கொள்வர். அதன் பிறகே அந்த ஆணையை வாசிப்பார்கள்.

சோழர் நிர்வாகத்தோடு தொடர்புடைய வேறு சொற்களும் இங்கு எடுத்துக்காட்டத்தக்கவை. வரிப்புத்தகம், வரிப்புத்தகக் கணக்கு ஆகிய சொற்கள் நிலவுரிமை, நிலவரி ஆகியவற்றோடு தொடர்புடையவை.

சமயமும் சமுதாய வாழ்க்கையும்

தொண்டை மண்டலத்தில் நிலை பெற்றிருந்த சமயங்களுள் சைவம், வைணவம், சமணம் ஆகிய சமயங்கள் சிறந்த செல்வாக்கினை பெற்றிருந்தன. பல்லவர் காலம் பக்தி இயக்கம் தொடங்கிய காலம் ஆகும். சோழர் காலம் பக்தி இயக்கம் செல்வாக்குபெற்றிருந்தது.

அதனால் கோயில் கட்டுதல், கட்டிய கோயில்களுக்கு தேவதானம் அளித்தல் ஆகியவற்றில் சோழர்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டனர். அது மட்டும் இன்றி சோழர் அரசின் நிர்வாகம் கோயில் வழிபாட்டுடன் பின்னிப் பிணைந்திருந்தது. அரசன் கோயிலுக்கு கொடை அளிப்பதன் மூலம் தன் செல்வாக்கினை உயர்த்திக் கொண்டார்.

பட்டயங்கள் கூற்று

கி.பி. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த விஜய ஸ்கந்த வர்மன் எனும் பல்லவன் காலத்தில் புத்தவர்மன் மனைவியான சாருதேவி என்பவள் நாராயணன் கோயிலுக்கு நிலதானம் செய்தாள் என குணோபதேய செப்பேடு கூறுகிறது.

திருக்கழுக்குன்றத்து சிவன் கோயிலிலுள்ள கடவுளுக்கு கந்தசிஷ்யன் என்ற பல்லவன் நிலம் விட்டதாகவும் அதனை முதலாம் நரசிம்மன் புதுப்பித்ததாகவும் ஆதித்தசோழன் கல்வெட்டு கூறுகிறது. கோச்செங்கணன் திருவக்கரையில் உள்ள சிவன் கோயிலில் பெருமாளுக்கு சிறு கோயில் ஒன்றை கட்டி இருந்தான். அதனை அதிராசேந்திரன் கல்லால் புதுப்பித்தான்.

உருவப்பள்ளி பட்டயம்

ஆந்திர நாட்டில் உள்ள கந்து தூரத்தில் இருந்த பெருமாள் கோயிலுக்கு இளவரசன் விஷ்ணுகோப பல்லவன் நிலதானம் செய்தான் எனக் கூறுகிறது.

சமணம்

சமண சமயம் தொண்டை மண்டலத்தில் சங்க காலம் முதல் நிலை பெற்றிருந்தது. தூசி மாமண்டூரில் உள்ள சமணப்படுக்கையும், பிராமிக் கல்வெட்டும் இதற்கு சிறந்த சான்று.

சங்கம் மருவிய காலத்திலும் சமணம் இப்பகுதியில் செல்வாக்கு பெற்று இருந்தமைக்கு பல சான்றுகள் கிடைத்து உள்ளன. செஞ்சி பனப்பாக்கம், வள்ளிமலை, சேதரம் பட்டு, திருப்பாண்மலை, அகளூர் (செஞ்சி), திருநாதற்குன்று, செஞ்சி ஆகிய ஊர்களில் படுக்கையுடன் சமண சின்னங்கள், கல்வெட்டுகள் ஆகியவை கிடைத்துள்ளன. இவற்றில் அகளூர் தமிழ் பிராமிக் கல்வெட்டு - கி.மு. முதலாம் நூற்றாண்டு திருநாதற்குன்று கல்வெட்டு கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்றும் கருதப் பெறுகின்றது. தமிழகத்திலேயே காலத்தால் முற்பட்ட இயக்கியின் உருவமும் கல்வெட்டும் இங்கு உள்ளன.

சமண எச்சங்கள் உள்ள ஊர்கள்

1. திருப்பருத்திக்குன்றம்
2. வெடால்
3. திருமலை

4. தச்சாம்பாடி
5. பூண்டி
6. மலையாம்பட்டு
7. புழல்

சமணக் கோயில்கள்

மகேந்திரவர்மன் சமணத்தில் இருந்து சைவத்திற்கு மாறியவன் கட்டிய சமணக் கோயில் சித்தன்ன வாசலில் உள்ளது.

இரண்டாம் நந்திவர்மன்

ஆற்காடு அருகே பஞ்சபாண்டவர் மலையில் ஒரு குகை சமணர்களுக்கு அளிக்கப்பட்டது. அங்குள்ள நந்தி போத்தரையர்க்கு ஐந்தாம் ஆண்டு நாகர் நந்தி குரவர் வழிபடப்பொன் இயக்கியார்க்குப் படிமம் எடுக்கப்பட்டது என்று கூறுகிறது. ஆயினும் உதயேந்திரம் செப்பேட்டில் தன் முன்னோர் சமணர்களுக்கு விட்டிருந்த நிலத்தைக் கவர்ந்து மறையவர்களுக்கு உரிமை ஆக்கினான் என்ற செய்தி காணப்படுகிறது.

காஞ்சி வைகுண்டப் பெருமாள் கோயில் சிற்பம்

இந்த சிற்பங்களில் இருதுறவிகள் அரசன் எதிரில் கழுவேற்றப்படுகின்றனர். இந்தச் சிற்பத்தின் வலப்புறம் ஆழ்வார் சிலை கொண்ட கோயிலையும் அதன் வலப்புறம் வைகுண்ட பெருமாள் கோயில் போன்ற தோற்றமும் காணப்படுகின்றன. இந்தச் சிற்பங்கள் பல்லவ மல்லனின் நடத்தையை நன்கு எடுத்துக் காட்டும்.

சோழர் காலம்

1. முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் ஆகிய மன்னர்கள் காலத்து கல்வெட்டுகளில் பள்ளிச்சந்தம் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. ஆனால் இம்மன்னர்களுக்குப் பிறகு பள்ளிச்சந்தம் பற்றிய குறிப்புகள் காணப்படாததினால் சமண சமயத்தின் வீழ்ச்சியை அடைந்துள்ளதை அறியமுடிகிறது.

மாறாக பெண்மையை போற்றும் யாப்பனியம், திராவிட சங்கம், ஹஸ்தம் சங்கம் முதலியன செழிப்படைந்தன.

சைவம்

தொண்டை மண்டலத்தின் சைவ சமயம், சமயக் குரவர்கள் வருகையுடன் செல்வாக்கும் பெற்றது. பல்லவர் காலத்தில் தொடங்கிய பக்தி இயக்கம் தொண்டை மண்டலத்தில் சைவ சமய எழுச்சிக்கு காரணமானது. இங்கு ஆட்சி செய்த பல்லவர்கள் சைவ சமயத்தை வளர்த்தார்கள். மகேந்திரவர்மன் சமணத்தில் இருந்து சைவத்திற்கு மாறினான் என திருச்சி குடைவரை கோயில் கல்வெட்டாலும், பெரிய புராணத்தாலும் உறுதி செய்யப்படுகின்றது.

மகேந்திரவர்மன் கட்டிய சிவன் கோயில்கள்

1. சீயமங்கலம்
2. பல்லாவரம்
3. தளவானூர்
4. வல்லம்
5. திருச்சி குடைவரை
6. மண்டகப்பட்டு மும்மூர்த்தி குடைவரை.

நரசிம்மவர்மன் கட்டிய சிவன் கோயில்கள்

1. மாமல்லையில் உள்ள நான்கு சிவன் கோயில்கள் என அங்குள்ள கல்வெட்டுகள் கூறுகின்றன.

முதலாம் பரமேஸ்வரவர்மன்

கணேசர் கோயில், இராமானுசர் மண்டபம் இரண்டும் இவரால் கட்டப்பட்டது. இவை முதலில் சிவன் கோயில்களாக இருந்தவை என கல்வெட்டுகள் கூறும்.

கல்மணிகளைக் கொண்டு சிவலிங்க வடிவாக அமைக்கப் பட்ட முடியைத் தலையில் அணிந்திருந்ததே இப்பேரரசனின் சிவபக்தியை தெரிவிக்கின்றது.

வைணவம்

தொண்டை மண்டலத்தில் வைணவம் செல்வாக்குப் பெற்று இருந்த தன்மை பெரும்பாணாற்றுப் படையில் குறிக்கப்பெறுகின்றது.

பல்லவர் காலம்

பல்லவர் காலம் முழுவதும் வைணவம் செல்வாக்குப் பெற்ற சமயமாக விளங்கியது

1. திருவல்லிக்கேணி
2. திருமழிசை
3. மாமல்லபுரம்
4. காஞ்சிபுரம்
5. பள்ளிக்கொண்டா

முதலிய ஊர்களில் திருமால் கோயில்கள் உள்ளன. இக்கோயில்களில் பல மங்களா சாசனம் பெற்றவை.

மகேந்திரவர்மன் கால பெருமாள் கோயில்கள்

1. மாமண்டூர்
2. மகேந்திரவாடி
3. சிங்கவரம்
4. நாமக்கல்

இரண்டாம் நந்திவர்மன்

சிறந்த வைணவ பக்தன், திருமங்கை ஆழ்வார் காலத்தைச் சேர்ந்தவன் காசாக்குடிப் பட்டயம் இவனை "அரிசன பரன்" என்று கூறுகிறது.

தண்டந்தோட்டப் பட்டயம்

முகுந்தன் திருவடிகளை தவிர வேறு ஒன்றுக்கும் இவன் தலை வணங்கியது இல்லை என்று கூறுகிறது.

வைணவப் பணிகள்

கூரம் கேசவப் பெருமாள் கோயில் இவரால் கட்டப்பட்டது. இவ்வாறு தொண்டை மண்டலத்தில் பல்லவர்களின் ஆட்சிக் காலம் வரை சமணம், சைவம், வைணவம் ஆகிய மூன்றுமே மிக்க சிறப்போடு விளங்கியது.

சோழர்களின் ஆட்சி அமையத் தொடங்கியதில் இருந்தே சமணம் தனது செல்வாக்கை இழக்கத் தொடங்கியது. சோழர்கள் பிற சமயத்தை போற்றினாலும் சைவ சமயத்திற்கே அதிக முக்கியத்துவம் அளித்தனர். ராசேந்திரன் காலம் வரை மட்டுமே சமண சமயம் சிறிது செல்வாக்கோடு இருந்தது. இன்று தொண்டை மண்டலத்தில் அதன் எச்சங்களே ஆங்காங்கு உள்ளன. மொத்தத்தில் சைவமும், வைணமும் பெரும் வளர்ச்சி பெற்றது சோழர்கள் காலத்தில்தான்.

❖✡❖

கல்வெட்டுச் செய்திகள்

திருப்புலிவனம் - வியாக்ரபுரீஸ்வரர் ஆலய கல்வெட்டுகள்

பல்லவ மன்னன் ராஜமார்த்தாண்டனாகிய அபராஜிதவர்மனின் 14-ஆவது ஆட்சி ஆண்டில் நான்கு விளக்குகளை கோயிலுக்கு வழங்கிய விவரமும், முதலாம் பராந்தக சோழனின் 13-ஆம் ஆட்சியாண்டில் விளக்குகள், அளிக்கப்பட்ட விவரமும், கன்னர தேவன் வழங்கிய விளக்குகள் விவரமும் மூன்றாம் குலோத்துங்கனின் கல்வெட்டின் மூலம் அறிகிறோம்.

முதலாம் குலோத்துங்னின் மூன்றாம் ஆட்சியாண்டு முதல் 25-ஆவது ஆட்சியாண்டு வரை பல கல்வெட்டுகள் உள்ளன. 25-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு கருவறை சுவரில் உள்ளது. இதன் மூலம் முதலாம் குலோத்துங்கனின் 25-ஆவது ஆட்சிக்கு சற்று முன்னர் கருவறை கற்றளியாக்கப்பட்டது எனலாம். எனினும் மண்டபம், பிரகாரம் முதலாம் இராசேந்திரன் காலத்தில் கற்றளி ஆக்கப்பட்டிருக்க வேண்டும். சபா மண்டபத்திலுள்ள குலோத்துங்க சோழனின் 45-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு மணவிற்கோட்டத்து பொன்னம்பல கூத்தன் என்ற காலிங்கராஜன் 12 கழஞ்சுகளை வழங்கி நான்கு விளக்குகளை எரிக்க ஏற்பாடு செய்துள்ளான் என்பதை தெரிவிக்கின்றது.

இரண்டாம் குலோத்துங்கன் பாப்பநல்லூரில் 60 வேலி நிலம் வழங்கி அரசாணை பிறப்பித்த விவரம் ஒரு கல்வெட்டில் உள்ளது. ஆணை வெளியிட்ட போது மன்னன் விக்கிரம சோழபுரம் அரண்மனை முத்து சிம்மாசனத்தின் மீது அமர்ந்தபடி இருந்துள்ளான். மற்றொரு கல்வெட்டில் வாதவூர் நாட்டு வாதவூரைச் சார்ந்தவன் விளக்கெரிக்க பசுக்களை வழங்கியதைக் கூறப்பட்டுள்ளது.

இரண்டாம் இராசாதிராசனுடைய ஒரு கல்வெட்டு அருளாளீஸ்வரம் என்ற வேறோர் கோயிலை குறிக்கிறது. (மதுராந்தகம் - பேருந்து நிலையம் அருகில் மேம்பால முடிவில் அருளாளீஸ்வரம் என்ற கோயில் காணப்படுகிறது. திருப்புலிவனம் கல்வெட்டில் கூறப்படும் ஆலயம் இதுவாக இருக்கலாம் என்பது ஆசிரியரின் கருத்தாகும்.)

கோயிலில் 30 கல்வெட்டுகள் உள்ளன. முதலாம் குலோத்துங்கனுடைய எட்டு கல்வெட்டுகளில் ஒன்று கி.பி. 1073-இல் தவறுதலாக ஒருவனை மற்றொருவன் கொன்று விட கொன்றவன் பாவம் நீங்க தண்டனையாக கோயிலுக்கு சந்தி விளக்கு வைத்ததை குறிப்பிடுகிறது.

விசய கண்ட கோபாலன் கல்வெட்டு தேவரடியார் தேர்த் திருவிழாவில் சாமரம் வீசிய விவரம் உள்ளது. வரிச்சுமை தாங்காமல் ஊரை விட்டு ஓடிய நெசவாளிகளை மீண்டும் திருப்புலிவனத்துக்கு வருவதற்கு குமாரகம்பணன் ஏற்பாடு செய்துள்ள விவரம் தெரிய வருகிறது. தேவராயன் கல்வெட்டு கருவேப்பம் பூண்டி என்ற ஊர் கோயிலுக்குத் தேவதானமாக வழங்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது. இதனின் காலம் 16-04-1436 ஆகும்.

முதலாம் குலோத்துங்கனுடைய 45-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு மணவிற் கோட்டத்து அரும்பாக்கிழான் பொன்னம்பலக் கூத்தனாகிய காலிங்கராயன் கோயிலுக்கு 12 கழஞ்சு பொன் அளித்து விளக்கு வைக்க ஏற்பாடு செய்துள்ளான் என்பதை தெரிவிக்கின்றது.

சபா மண்டபத்தில் உள்ள காலம் மற்றும் அரசன் பெயர் இல்லாத கிரந்த கல்வெட்டு, வியாக்ரகவிநாதா என்ற ஆடலரசர் மண்டபத்தை ஆதமங்கலம் சேதிராசன் கட்டியதைக் குறிப்பிடுகிறது.

முதலாம் இராசநாராயணச் சம்புவராயனுடைய கல்வெட்டு இரு ஊரார்க்கு ஏற்பட்ட தண்ணீர் பிரச்சனையை தீர்த்து வைத்ததை கூறுகிறது. திருப்புலிவனமுடைய நாயனார்க்கு

திருநாமத்துக் காணியாக நிலம் வழங்கப்பட்டதும் இக்கல்வெட்டில் கூறப்படுகிறது. பிறைநூறு சீரடியார் என்ற தேவரடியார் விளக்குக் கொடை அளித்ததை ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது.

கோப்பெருஞ்சிங்க தேவன் ஆட்சியில் இரண்டு விளக்குகளை ஒரு தேவரடியார் வழங்கி உள்ளார். வெளிப்பிரகாரத்தில் தென் கிழக்கில் உள்ள மண்டபத்தில் விசயகண்ட கோபாலன் குலசேகரன் பாண்டியன் கல்வெட்டுகள் உள்ளன.

நந்திவர்மன் காலத்தில் ஊர்ச்சபையார் இக்கோயிலில் வேதம் வல்லவனாய் பாராயண மார்க்கம் தெரிந்தவனாய் இருப்பவனைத் தான் பூசை செய்ய அமர்த்த வேண்டும். ஆயினும் அவன் மூன்றாண்டுகளுக்கு தான் இவ்வேலையில் அமர்த்தப்பட வேண்டும். அதன் பின்னர் வேறு ஒருவன் அமர்த்தப்பட வேண்டும் என்று ஆணையிட்டனர்.

கி.பி.1016-இல் இராசேந்திர சோழன் காலத்தில் 2456 குழி நிலம் இக்கோயிலுக்கு கொடுக்கப்பட்டது. அதன் வருவாய் கொண்டு இக்கோயில் மகாதேவர்க்கு பூசை, திருவமுது நாள்தோறும் மூன்று சந்தி நடைபெற வேண்டும் என ஊரார் ஆணையிட்டனர். மேலும் இப்பணியை சிவாச்சாரியார்களே மேற்பார்வையிட வேண்டும். இதற்காக நான்கு பட்டி நிலம் கொடுக்கப்பட்டது. மேலும் ஆண்டுதோறும் திருப்புலிவனத்து மகாதேவர்க்கு ஆனி மாதம் ஜோதி அன்று 1008 கலசம் அபிடேகம் செய்ய வேண்டும். இதற்கு மகாஸ்நானம் என்று பெயர். அதில் 125 நாழி நெய்யும், 125 நாழி தயிரும் பயன்படுத்த வேண்டும். அன்று 1008 பிராமணர்களுக்கு உணவு அளிக்க வேண்டும் என ஊரார் ஏற்பாடு செய்தனர்.

பல்லவ மன்னன் கம்பவர்மன் காலத்தில் ஒரு பிராம்மணப் பெண்மணி இறக்கும் தருவாயில் இருந்தாள். தான் இறந்து விடுவோம் என்று அறிந்த அவள் 12½ கழஞ்சு பொற்காசுகளை இக்கோயிலுக்கு அளித்தாள். அதைக் கொண்டு அவள் நினைவாக ஒரு விளக்கு நாள்தோறும் எரிக்க வேண்டிக் கொண்டாள். ஊர்சபை

அவளது வேண்டுகோளை ஏற்று விளக்கெரிக்க ஒப்புக் கொண்டு, இந்த தர்மத்துக்கு யாராவது தவறிழைத்தால் அவனை மகாபாதகனாக கருதுவோம் என அறிவித்தனர். ஒருவன் மகா பாதகன் எனக் குறிக்கப்பட்டால் அவனுக்கு பல சலுகைகள் நீக்கப்பட்டு பொது வாழ்வில் கீழ்நிலைக்குத் தள்ளப்படுவான்.

கி.பி.921-இல் பராந்தக சோழன் காலத்தில் இக்கோயிலுக்குக் கொடுக்கப்பட வேண்டிய நெல்லும் பொன்னும் கொடுக்கப்படவில்லை. அதை வாங்குவதற்கு சில ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதைக் குறிப்பிடும் கல்வெட்டு முழுமையாக எழுதப்படாமலேயே நின்று விட்டது.

அரசனுடைய ஆணைப்படி அதற்குண்டான நிலத்தை விற்று கொடுக்க வேண்டிய தொகைக்கு இருமடங்கு தண்டம் உள்பட வசூலிக்க வேண்டும் என உத்தரவாயிற்று.

1215-இல் ஒரு முக்கியச்செய்தி, அவ்வாண்டுக்கும் 330 ஆண்டுகளுக்கும் முன்னர் ஆண்ட பல்லவ மன்னன் அபராசிதன் என்பவன் இக்கோயிலுக்கு நான்கு விளக்குகளை எரிக்க 100 பொற்காசுகளை கொடுத்தான். அதை ஊர் சபையார் ஏற்றுக்கொண்டு பணத்தை பெற்றனர்.

அதன் பின்னர் ஒரு பெண்மணி உட்பட பலர் விளக்கெரிக்க பணம் கொடுத்தனர். 919, 920, 959-ஆம் ஆண்டுகளில் இவ்வாறு பணம் கொடுக்கப்பட்டதை ஊர்ச்சபை பெற்றுக் கொண்டது. இவ்வாறு மொத்தம் எட்டு விளக்குகள் எரிக்க வேண்டும். 1215-ஆம் ஆண்டு இவ்விளக்குகள் எரிக்கப்படவில்லை என்பதைக் கண்டு மாகேஸ்வரர்கள் அரசனிடம் முறையிட்டனர். அப்பொழுது ஆட்சியிலிருந்த ஊர்ச்சபையார் முன் வந்து 330 ஆண்டுகளுக்கும் முன்பு எம் முன்னோர்கள் செய்ய வேண்டியதை நாங்கள் செய்ய கடமைப்பட்டுள்ளோம். இவ்வளவு தொகையைக் கட்ட எங்களுக்கு வருவாய் இல்லை. அதனால் அதற்கு பதிலாக ஆண்டுதோறும் நடைபெறும் சித்திரை பெருவிழாவில் கொடியேற்றம் உட்பட 10 நாட்களுக்கு ஆகும் செலவை நாங்கள் ஏற்றுக்கொண்டு நடத்தி

தர அனுமதி தர வேண்டும் என தானத்தார்களையும், மாகேஸ்வரர்களையும் கேட்டுக் கொண்டனர். அதைக் கல்வெட்டு "எங்கள் பூர்வ புருஷாள் முன்பு கல்வெட்டின படியே எங்களுக்கு எரிக்க வேண்டுமாகையால் எனக் கூறுகிறது.

திருப்புலிவனம் கல்வெட்டுகளில் - காசு பணம் பற்றிய குறிப்புகள்

திருப்புலிவனம் கல்வெட்டுகளில் பணம், நெய்காசு பொன், கழஞ்சு ஆகியவை அடிக்கடி பயன்படுத்தப்பட்டு உள்ளன.

பல்லவர் காலம்

பல்லவர் காலக் கல்வெட்டுகளில் காணம், கழஞ்சு, காசு பழங்காசு, பொன், பணம் ஆகியவை குறிக்கப்படுகின்றன. கழஞ்சு ஒரு நாணயமாக இல்லாமல் பொன்கட்டியாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

சோழர் காலம்

சோழர் காலக் கல்வெட்டுகளில் மாடை, பொன், கழஞ்சு, காசு, பணம் ஆகியவை குறிக்கப்படுகின்றன.

எண்	குறிக்கப்படும் பெயர்	A.R.E. No.
1.	பணம் 340	A.R.E. No.199 of 1923
2.	நெய்க்காசு, பணம் 5	A.R.E. No.201 of 1923
3.	பொன் 12 கழஞ்சு	A.R.E. No.207 of 1923
4.	ரூ.50 பணம்	A.R.E. No.214 of 1923
5.	பணம் 250, 150, 200	A.R.E. No.390 of 1923
6.	100 கழஞ்சு, 12 கழஞ்சரை பொன்	A.R.E. No.207 of 1923

கோட்டம்

தொண்டை மண்டலத்தில் உட்கிடை அரசியல் பூகோளம் பிரிவுகளுக்கு கோட்டம் என்று பெயர். பல்லவர் வருகைக்கு

முன்பே இங்கு இருந்தது. இப்பெயர் கோடு என்ற வேர் சொல்லிருந்தும் கோஷ்டம் என்ற சொல்லின் திரிபு என்னும் இரு கருத்துக்கள் உள்ளன.

முன் கருத்துக்கு ஆதரவாக தொண்டை மண்டலத்து புவியியல் அமைப்பை சான்றாக கூறுவர். கோடு என்பதற்கு குன்றின் உச்சி என்றும், தரைப்பகுதியில் மேடான பகுதி எனவும் கொண்டு கோட்டம் என்று பெயர் உருவாவதற்கு இதுவே காரணம் என்பர்.

மற்றொரு சாரார் கோஷ்டம் என்ற வடசொல்லிற்கு மாட்டுப்பட்டி என்று பொருள் கொண்டு தொண்டை மண்டலத்தில் முல்லை வாழ்க்கை மிகுந்திருந்தமையால் இப்பெயர் வந்தது என்பர். கோஷ்டம் என்ற வடசொல்லிற்கு மேய்ச்சல் நிலம் என்ற பொருளும் உண்டு. குறிப்பிட்ட ஊருக்குரிய (அ) குழுவுக்குரிய மேய்ச்சல் நிலம் என்ற பொருளில் கோஷ்டம் என்ற சொல் தொண்டை மண்டல நாட்டுப் பிரிவுகளுக்கு பயன்பட்டிருக்க வேண்டும்.

எவ்வாறாயினும் "கோட்டம்" என்ற பெயர் கால்நடை வளர்ப்புடன் தொடர்புடையது என்பது மறுக்க முடியாத உண்மை.

கோட்டம் என்ற பிரிவினை ஆளுவதற்கு கோட்டத்தார் என்ற சபையினர் இருந்து உள்ளனர். கந்த சிஷ்யன் அளித்த இராயக்கோட்டை செப்பேட்டில் அரசாணை நாட்டார்க்கு மட்டுமின்றி கோட்டத்தார்க்கும் அளிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

நிலம் பற்றிய அரசாணை நாட்டார்க்கு மட்டும் கொடுப்பது வழக்கம். ஆனால் இராயக்கோட்டை செப்பேட்டில் ஆணை கோட்டத்தார்க்கும் அளிக்கப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்பு சமூகத்தில் உருவான கோட்டத்தாரை அத்தொழில் மிக்கிருந்த பகுதியில் நாட்டார்க்கு சமமாக கருதினர் என்பது இதனால் புலப்படும்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள படூரில் உள்ள மூன்றாம் நந்திவர்மன் கல்வெட்டு ஒன்றில்

"ஆமூர்க் கோட்டத்து கோட்ட மன்றாடிகள்"
என்று குறிக்கின்றது.

மன்றாடி

மன்றாடிகள் என்ற சொல் கால்நடைவளர்ப்பவர்களையும், நீதிபதிகளையும் குறித்து வந்தது. கோட்டத்தோடு இப்பெயர் சேர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

திருப்புலிவனம் கல்வெட்டில் கோட்டம்

கோட்டம் பெயர்	A.R.E. No.
காலியூர்க் கோட்டம்	(A.R.E. No.43/1898, 45/1898, 198/1923, 200/1923, 202/1923, 206-207/1923, 209/1923, 211-212/1923, 391/1923).
வெண்குன்ற கோட்டம்	A.R.E. No.44/1898,203/1923
எயிற் கோட்டம்	A.R.E. No.199/1923
சக்கரக் கோட்டம்	A.R.E. No.395/1923

மண்டலம்

முதலாம் ராசராசன் தான் சோழப்பேரரசு விரிவடைந்த போது அவன் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளை 14 மண்டலங்களாக பிரித்தார். அதில் தொண்டை மண்டலத்திற்கு அவர் சூட்டிய பெயரே ஜெயங்கொண்ட சோழ மண்டடலம் என்பது மண்டலங்களை நிர்வகிக்க மண்டலம் முதலி என்ற அதிகாரியை நியமித்து இருந்தனர்.

திருப்புலிவனம் கல்வெட்டுக்களில் மண்டலப் பெயர்கள்

மண்டலப்பெயர்	A.R.E. No.
ஜெயங்கொண்ட சோழமண்டலம்	A.R.E. No. 45/1898,

	202/1923, 203/1923,
	206/1923, 211/1923,
	209/1923, 213/1923,
	396/1923.
மகாறல் மண்டலம்	A.R.E. No.199/1923
ராஜேந்திர சோழ மண்டலம்	A.R.E. No.395/1923

நாடு

ஈரோடு பள்ளிக்கொண்ட பெருமாள் கோயிலில் கிடைத்த செப்பேட்டில் (இரவிக்கோதை காலத்தியது) நாடு என்பது வேளாண்மை நிலம் என்ற பொருளில் அமையப் பெற்றது. இரவிக் கோதையிடம் ஒருவன் எனக்கு நாடு வேண்டும் என்று கேட்கிறான். நாடு என்பது வேளாண் செய்யும் நிலத்தைக் குறிக்கும். இது சங்க காலத்திலிருந்து உருவான போக்கு.

பட்டினப்பாலையில் "காடு கொன்று நாடாக்கி" என்று கூறுவதைக் காண்கிறோம். புறநானூற்றில் குன்று, மலை, காடு நாடு என்று கூறுவதைக் காண்கிறோம். இவ்விடங்களில் நாடு என்பது வேளாண்மை நிலம் எனப் பொருள்படும். இந்தப் பொருள் கொங்கு நாட்டில் கி.பி.10-ஆம் நூற்றாண்டிலும் பயின்று வந்துள்ளது என்பது புலப்படும்.

பேராசிரியர் ஏ.சுப்பராயலு - சோழ மண்டலத்து அரசியல் புவியியல் என்ற நூலில் நாடு உருவான முறை பற்றி விரிவாக ஆராய்ந்து உள்ளார். அவருடைய கருத்துப்படி சங்க காலத்திலேயே நாடு என்பது வேளாண்மையை அடிப்படையாக கொண்டு உருவாயிற்று. அது காடழித்துத் திருத்த பெற்ற நிலப்பகுதி என்றே பொருள்பட நின்றது.

நாடு பற்றி பேராசிரியர் சுப்பராயலு கருத்து:-

நாடு என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பு என்று கொள்வதைக் காட்டிலும் வேறு பொருள் கொண்டு விளங்கியது சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூறு நாடு பற்றி எடுத்துக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

சேர மன்னனை பாடும் புலவர் ஒருவர் "குன்று, மலை, நாடு, காடு ஒன்றுபட்டு வழிமொழிய" என்று கூறுவார். இங்கு நாடு என்பது குன்று, மலை, காடு ஆகியவற்றில் இருந்து வேறுபட்டு விளங்குகிறது. இங்கு நாடு என்பது நாகரிகம் பெற்றதும் மக்கள் வாழ்வதுமான பகுதி என்று பொருள்படுகிறது. மேலும் பட்டினப்பாலையில் "காடுகொன்று நாடாக்கி" என்று கூறப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சான்றுகள் நாடு - வேளாண் நிலம் என்ற பொருளிலும் வேளாண்மையில் ஈடுபடுவோர் பகுதி என்ற பொருளிலும் வழங்கியது. இதனுடைய உருவாக்கம் வேளாண்மைக்கு தகுந்த இயற்கை வளம் மிக்கப் பகுதிகளில் அமைந்திருந்தது.

அந்த நாட்டிற்குள் வாழும் வேளாளர்கள் தங்களுக்குள் ஒரு சபை வைத்திருந்தனர். அதுவே நாட்டுச் சபை. ஆனால் கல்வெட்டுகளில் நாடு என்ற சொல் நாட்டுப் பிரிவின் புவியியலையும், நாட்டுச் சபையையும் குறித்தது. பல்லவர் காலத்தில் இருந்து இந்தப் போக்கு உருவாகி விட்டது.

திருப்புலிவனம் கல்வெட்டுகளில் நாடு

கல்வெட்டுகளில் நாட்டுப் பெயர்	A.R.E. No.
இரும்பேடு நாடு, ஓய்மா நாடு	A.R.E. No. 44 of 1898
வெதுங்க நாடு	A.R.E. No. 44 of 1898
புலிவனநாடு	A.R.E. No. 200 of 1923
வாதவூர் நாடு	A.R.E. No. 203 of 1923
தென்கரை உய்யக்கொண்டார் வளநாடு சேற்றூர் பாகூர் நாடு	A.R.E. No. 389 of 1923
புலிவன நாட்டு உடையார்	A.R.E. No. 213 of 1923
விற்பேடு நாடு	A.R.E. No. 395 of 1923

வளநாடு

முதலாம் ராசராசன் காலத்தில் வளநாடு என்ற அரசியல் பூகோளப்பிரிவு உருவாக்கப் பெற்றது. இந்த பிரிவு மண்டலம் என்ற பிரிவுக்கும் நாடு என்ற பிரிவுக்கும் இடையில் வைத்துக் கூறப்பெற்றது. வளநாடு என்ற பிரிவுக்குள் சில நாடுகள் அடங்கப்பெற்று இருக்கும்.

வளநாடு என்ற பிரிவு நாடு முழுவதிலும் நில அளவு செய்த போது உருவாக்கப் பெற்றது. நில வருவாய் வளநாடு அளவில் காணக்கிடப் பெற்றது. வளநாட்டின் தலைமை பொறுப்பில் இருந்தவர்கள் அப்பகுதி நிலவருவாய்க்கும் பொறுப்பானவர்களாக விளங்கினர்.

தனியூர்

தனியூர் பற்றிய கல்வெட்டுக் குறிப்புகள் அவை வளநாட்டுடன் தொடர்புபடுத்திக் கூறப்பெறுகின்றனவே ஒழிய நாட்டுடன் தொடர்புபடுத்திக் கூறப்பெறவில்லை.

பாக்கம்

பாக்கம் என்ற பின்னொட்டு செய்தல் நிலத்திலிருந்த வாழ்விடங்களுக்கு வழங்கப் பெற்ற பின்னொட்டு. ஆனால் பின்னாளில் மற்ற திணைகளில் இருந்த வாழ்விடங்களுக்கும் வழங்கப் பெற்றது.

திருப்புலிவனக் கல்வெட்டுகளில் வளநாடு

வளநாட்டுப் பெயர்	A.R.E. No.
உய்யக் கொண்டார் சோழவளநாட்டு	A.R.E. No.199 of 1898
தென்கரை உய்யக்கொண்டார் வளநாட்டு	A.R.E. No.389 of 1923

திருப்புலிவனக் கல்வெட்டுகளில் தனியூர்

1. A.R.E. No.43 of 1898
2. A.R.E. No.44 of 1898

3. A.R.E. No.45 of 1898
4. A.R.E. No.202 of 1923
5. A.R.E. No.206 of 1923

ஆகியவற்றில் தனியூர் இராசேந்திரசோழச் சதுர்வதிமங்கலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

6. A.R.E. No.208 of 1923
7. A.R.E. No.212 of 1923

பாக்கத்தின் பெயர்	A.R.E. No.
சூழ்ச்சி பாக்கத்து குடிப்பள்ளி	A.R.E. No.44 of 1898
சிற்றிலைப் பாக்கம்	A.R.E. No.389 of 1923
முடிஞ்சிராய பாக்கம்	A.R.E. No.393 of 1923

நீர் நிலைகளும், வரிகளும்

சங்க இலக்கியங்களில் நீர் பற்றியச் சிறப்பு அணையை அழித்துக் கரைகளில் பரவி நேர் கிழக்காகப் பாயும் அழகிய குளிர்ந்த காவிரிப் பேராறு ஆட்டனத்தியைக் கைக்கொண்டது என அகநானூற்றுப் பாடல் 76 குறிப்பிடுகிறது.

மேகம் உலகத்தவர் வேண்டாமலேயே மழையைப் பொழியும் அது போல அண்டிரனும் குறிப்பறிந்து பரிசில் வழங்குவான என புறநானூறு பாடல் 132 குறிப்பிடுகிறது.

பழமொழி

"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" எனக் கூறுவதிலிருந்து நீரின் சிறப்பை அறியலாம்.

கல்வெட்டுகள் மூலம் அறியும் சொற்கள் (நீர் தொடர்பாக) ஒன்பதாம் நூற்றாண்டில் இருந்து கிடைக்கும் கல்வெட்டுகளில் ஏரிகளின் பெயர்களைக் காண்கிறோம். கல்வெட்டுகளில் வரும் ஏரி தொடர்பான வார்த்தைகள்

1. ஏரி மீன் காசு
2. ஏரிப் பாய்ச்சல்
3. ஏரி மீன் பாட்டம்
4. மீன் பாட்டம்
5. மீன் கடமை
6. ஏரி மீன்
7. விற்பணம்
8. பாசிப் பாட்டம்
9. ஓழுகு மீன்பாட்டம்
10. ஏரி மீன் அவசரம்
11. ஏரி மீன் விலைப்பணம்

திருப்புலிவனக் கல்வெட்டுகளில் ஏரி

திருப்புலிவனம் ஏரிக்கு வரும் தண்ணீரின் அளவு குறித்து மருத்துவான்பாடி, மாட்பாண்டார் பூண்டி ஆகிய இருவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு ஸ்ரீஇராசநாராயண சம்புவராயரால் பிரச்சனை தீர்க்கப்பட்ட செய்தியை கூறுகிறது. A.R.E. No. 200 of 1923

சதுர்வேதி மங்கலம்

நான்கு வேதம் கற்ற அந்தணர்களுக்கு வழங்கப்படும் நிலபரப்பு சதுர்வேதி மங்கலம் என அழைக்கப்பட்டது.

அளவுகள்

அளவைக் குறிப்பிடும் பொழுது ராசகேசரி என்ற பெயரால் குறிக்கப்பெறுகின்றது. நெய் அளப்பதற்கும் ராசகேசரி என்ற உழக்கு குறிக்கப்பெறுகின்றது.

நில அளவு குறிப்பிடும் பொழுது 'குழி' என்ற அளவு தான் மிகுதியாகப் பயின்று வருகிறது.

பிரம்மதேயம்

அந்தணர்களுக்கு அரசன் நிலம் வழங்குவது பிரம்மதேயம். சேரன் செங்குட்டுவன் பரணர்க்கு உம்பர்க் கட்டுவாரியை கொடுத்தான். செல்வக் கடுங்கோ வாழியாகன் கபிலர்க்கு நூறாயிரங்காணம் கொடுத்து நன்றா வென்னும் குன்றேறி கண்ட நாடெல்லாம் கொடுத்தான். பெருஞ்சேரலாதன் குமட்டூர் கண்ணனார்க்கு ஐந்நூறூர் பிரமதேயங் கொடுத்தான். வேள்விக்குடி செப்பேட்டிலும் "நீரோட்டிக் கொடுத்தான்" என்ற செய்தி காணப்படுகிறது.

"ஒரு பிராமணருக்கு கொடுப்பது ஏக போக பிரமதேயம் பல பிராமணர்களுக்கு கொடுப்பது பிரம தேயம்" என்றும் குறிக்கப்படுகின்றன. கோயில்களை சார்ந்து அளிக்கப்பட்ட பிராமணர் நிலங்கள் தேவதான பிரம்ம தேயம் என்றும் பெயர் பெற்றன.

பல்லவ ஆட்சியில் பிரம்மதேயம்

பல்லவர் ஆட்சியில் கி.பி.நான்காம் நூற்றாண்டு முதல் பிரம்ம தேயங்கள் உருவாக்கப் பெற்றன.

500-600 கால கட்டத்தில் பிரம்ம தேயங்கள் உருவாக்கப் பெறவில்லை.

601-700-இல் 3 பிரமதேயங்கள் உருவாக்கப் பெற்றன.

701-800-இல் 14 பிரம தேயங்கள் உருவாக்கப் பெற்றன.

801-900-இல் 24 பிரம தேயங்கள் உருவாக்கப் பெற்றன.

கி.பி.900-க்குப் பின் 9 பிரம்மதேயங்கள் உருவாக்கப் பெற்றன.

திருப்புலிவனம் கல்வெட்டுகளில் வருஷம், மாதம், கிழமை, நட்சத்திரகுறிப்புகள்

காலம் பற்றிய குறிப்பு	A.R.E. No.
கரவருஷம் - தை மாதம்	A.R.E. No.199 of 1923

துலாஞாயிற்று - பூர்வபட்ஷத்து சஷ்டியும் திங்கட்கிழ....	A.R.E. No.200 of 1923
விபவ வருஷாதி மார்கழி மாதம் 12-ஆம் தேதி நாள்	A.R.E. No.201 of 1923
மேஷ ஞாயிற்று பூர்வ பக்ஷத்து அஷ்டமியும் சுக்கிர வாரமும் பெற்ற பூசத்து நாள், விபவ வருஷத்து கிருஷப ஞாயிற்று பூர்வபக்ஷத்து தசமியும்	A.R.E. No.202 of 1923
உத்திரமும் பெற்ற ஞாயிற்றுக் கிழமை	
மேஷனாராயிற்று பூர்வ பட்ஷத்து தசமியும் திங்கட்கிழமையும்	A.R.E. No.208 of 1923
மீன ஞாயிற்று பூர்வபட்ஷத்து திருதியையும் ரேவதியும் பெற்ற செவ்வாய்கிழமை நாள்	A.R.E. No.209 of 1923
மேஷ ஞாயிற்று பூர்வ பட்ஷத்து துவாதசியும் அத்தமும் பெற்ற புதன்கிழமை நாள்	A.R.E. No.211 of 1923
துலா ஞாயிற்று பூர்வபட்ஷத்து பௌர்ணமியும் செவ்வாய்கிழமையும் பெற்ற ரேவதி நாள்	A.R.E. No.212 of 1923
சகாப்தம் 1348 விசுவாசு வருடத்து கன்னி ஞாயிற்று பூர்வ பட்ஷத்து பஞ்சமியும் புதன்கிழமையும் பெற்ற உத்திரத்து நாள்	A.R.E.No.214 of 1923
சகாப்தம் 1294 பரிதாபி சம்வத்சரத்து தனு ஞாயிற்று பூர்வ பட்ஷத்து	

பஞ்சமியும் புதன்கிழமையும் பெற்ற மகத்து நாள்	A.R.E. No.389 of 1923
சகாப்தம் 1296 ஆனந்த வருஷம் ஆடி மாதம் இரண்டாவது தேதி நாள், ப்ரமாதி வருஷம்	A.R.E. No.390 of 1923
கார்த்திகை மாதம் 25-ஆம் தேதி மிதுன ஞாயிற்று பூர்வபட்ஷத்து நவமியும் ஞாயிற்றுக் கிழமையும் பெற்ற அத்தத்து நாள்	A.R.E. No.396 of 1923

திருப்புலிவனக் கல்வெட்டுகளில் சதுர்வேதி மங்கலம்

சதுர்வேதி மங்கலத்தின் பெயர்	**A.R.E. No.**
ஸ்ரீஇராஜேந்திரசோழ சதுர்வேதி மங்கலம்	A.R.E. No.43 of 1898
ஸ்ரீஇராஜேந்திரசோழச் சதுர்வேதி மங்கலம்	A.R.E. No.44 of 1898
ஸ்ரீ இராஜேந்திரசோழச் சதுர்வேதி மங்கலம்	A.R.E. No.45 of 1898
இராஜேந்திர சோழச்சதுர்வேதி மங்கலம்	A.R.E. No.198 of 1923
உத்தரமேருவான இராஜேந்திர சோழ சதுர்வேதி மங்கலம்	A.R.E. No. 200 of 1923
உத்தரமேருவான இராஜேந்திர சோழச்சதுர்வேதி மங்கலம்	A.R.E. No. 202 of 1923
தனியூர் ஸ்ரீஇராஜேந்திரசோழச் சதுர்வேதி மங்கலம்	A.R.E. No.203 of 1923
. . . . ந்திர சோழச்சதுர்வேதி மங்கலம்	A.R.E. No. 206 of 1923

தனியூர் ஸ்ரீ ராஜேந்திர சோழச் சதுர்வேதி மங்கலம்	A.R.E. No.207 of 1923
உத்தரன்மேருவான இராஜேந்திர சோழச் சதுர்வேதி மங்கலம்	A.R.E. No.208 of 1923
உத்தரன்மேருவான ராஜேந்திர சோழச் சதுர்வேதி மங்கலம்	A.R.E. No.209 of 1923
உத்தரன்மேலூரான கண்டகோபால சதுர்வேதி மங்கலம்	A.R.E. No.211 of 1923
உத்திரமேருவான ராஜேந்திரசோழ சதுர்வேதி மங்கலம்	A.R.E. No.212 of 1923
உத்தரமேருவான இராஜேந்திர சோழச் சதுர்வேதி மங்கலம்	A.R.E. No.213 of 1923
விக்கிராமபரண சதுர்வேதி மங்கலம்	A.R.E. No.389 of 1923
விக்கிரமாபுரண சதுர்வேதி மங்கலம்	A.R.E. No.390 of 1923
செங்கேணி அத்திமல்லன் சம்பூவ.... சதுர்வேதி மங்கலம்	A.R.E. No.394 of 1923

திருப்புலிவனம் கல்வெட்டுகளில் வரும் அளவு முறைகள்

அளவுகள் மற்றும் குறிப்பிடும் முறை	A.R.E No.
செல்வ இராஜகேசரியாலே உழக்கு நெய்	A.R.E No.43 of 1898
நிலம் - 60 வேலி, காணி	A.R.E No.198 of 1923
மனை 83/8 (அவறு)	A.R.E No.199 of 1923
உழக்கெண்ணை, பொலிசை எண்ணை உழக்கு	A.R.E. No.203 of 1923
நெய்-32 நாழி, நெய் - 310 நாழி	A.R.E.No.207 of 1923
இராஜகேசரியால் ¼ படி	A.R.E. No.208 of 1923
32 படி பால்	A.R.E. No.209 of 1923
ராஜகேசரியால் ¼ படி நெய் உழக்கு	A.R.E. No.211 of 1923
ராஜகேசரியால் ½ படி நாழி ½ நெய்உரி	A.R.E. No.212 of 1923
படிக்காலால் அளக்கும் நெய் ¼ நாழி	A.R.E. No.213 of 1923

திருப்புலிவனம் கல்வெட்டுகளில் சபை

சபையின் பெயர்	A.R.E. No.
உத்தரமேரூர் மகாசபை	A.R.E. No.202 of 1923
நாட்டார்	A.R.E. No.201 of 1923
விக்கிரபரண சதுர்வேதி மங்கலத்து மகா சபையோம்	A.R.E. No.390 of 1923

திருப்புலிவனம் கல்வெட்டில் பிற கோயில்கள்

கோயிலின் பெயர்	A.R.E. No.
அருளாளீஸ்வரம்	A.R.E. No.204 of 1923

மதுராந்தகம் பேரூந்துநிலையம் அருகில் உள்ள கோயிலாக இருக்கலாம்.

கல்வெட்டில் வரும் பிற ஊர்கள்

ஊரின் பெயர்	A.R.E. No.
குளத்தூர், மாப்பாண்டார் பூண்டி உத்தரமேரூர், மருத்துவான்பாடி	A.R.E. No.200 of 1923
கருவேப்பம்பூண்டி, திருசித்திர	

கடநல்லூர்	A.R.E. No.202 of 1923
சிற்றம்பல நல்லூர், பிடாரன்பட்டு நல்லம்பாளையம், அரசாணிமங்கலம் உழுதமங்கலம்	A.R.E. No.313 of 1923
அரசாணிமாலை, மாகறல்	A.R.E. No.389 of 1923
விஷாற்று வங்கிபுரம்	A.R.E. No.376 of 1923

திருப்புலிவனம் கல்வெட்டுகளில் ஆவணங்கள்

ஆவணத்தின் பெயர்	A.R.E. No.
ஊர் விலைப் பிரமாணம்	A.R.E. No.199 of 1923
பிரமாணம், பூர்வ பிரமாணம்	A.R.E. No.200 of 1923
உதகபூர்வம்	A.R.E. No.201 of 1923
பிரமாணம், ஊர்விலை பிரமாணம்	A.R.E. No.389 of 1923

திருப்புலிவனம் கல்வெட்டுகளில் வரும் அமுது படையல்கள்

அமுது பெயர்	A.R.E. No.
நெய்யமுது, தயிரமுது	A.R.E. No.209 of 1923
பால் அமுது, நெய் அமுது	A.R.E. No.213 of 1923

திருப்புலிவனம் கல்வெட்டுகளில் வரும் தனிநபர் பெயர்கள்

தனிநபர் பெயர்கள்	A.R.E. No.
திருச்சூர் கண்ணப்பன் ஆதிநாயகன் இராசராச நில கங்கரையன்	A.R.E. No.43 of 1898
செல்வப்பொறையன், சிங்கன்	A.R.E. No.44 of 1898
ராஜேந்திர சோழப்பெடையி	A.R.E. No.45 of 1898
உண்ணாமலை நாச்சியார்	

பெரியன் மண்டல பூஷன் பாம்பணி	A.R.E. No.199 of 1923
அரங்கன் பட்டனான செம்பியன் பல்லவரையன்	A.R.E. No.203 of 1923
தேவரடியார் உஞ்சியார் கற்பூரப் பிள்ளை மகள் பிறைநூறு சீரடியார்	A.R.E. No.210 of 1923
மகள் பிறைநூறு சீரடியார் பிறைநூறு சீரடியார்	A.R.E. No.211 of 1923
தேவரடியார் பிச்சியார் மகன் ஐய நாயரானவீ கங்கா	A.R.E. No.212 of 1923
உத்திரவேழம்மை சிறுநங்கைக் சரஸிக்க, விக்கிரமனித்தனாகிய கண்டேஸ்வரதாசன்	A.R.E. No.396 of 1923
ஆலத்தூர் சாத்தந்தை, உத்தரமேரூ உடையான் வைத்தியப்பிரியன், வீரவல்லி கோவிந்த பட்டன் பெரிய உத்தமநம்பி, வீரசம்பவாணராயன்	A.R.E. No.200 of 1923
வீரவல்லி முதலியார், வீரவல்லி பெரியபெருமாள், ஆத்திக்கொம்பு ஆலிபெருமாள் மகாஜனனிகிரயன்	A.R.E. No.202 of 1923
உக்கல், கம்பாண்டை காங்கேயனேன்	A.R.E. No.389 of 1923

மன்றாடி

மன்றாடி என்ற சொல் சோழ நாட்டு கல்வெட்டுகள், தொண்டை நாட்டுக் கல்வெட்டுகள் ஆகியவற்றில் மிகுதியாக பயின்றுவரக் காணலாம். ஆனால் ஒவ்வொரு பகுதியிலும் ஒரு பொருள் கூறப்படுகின்றது. தொண்டை நாட்டிலும், சோழ நாட்டிலும்

கால்நடை வளர்ப்போரின் பேராளர் என்ற பொருளில் வழங்கப் பெறுகின்றது.

கொங்கு நாட்டு - மன்றாட்டு

கொங்கு நாட்டில் கோயிலுக்கு தேவதானமாக அளிக்கப்பெற்ற ஊர்கள் அளவின் தன்மைக்கேற்ப ஐந்து மன்றாட்டு, ஏழு மன்றாட்டு, எட்டு மன்றாட்டு என்று பிரிக்கப்பெறும். இங்கு மன்றாட்டு என்பது பங்கு என்ற பொருளில் வழங்கப் பெறுகிறது. கொங்கு நாடு சங்க காலம் தொட்டு கால்நடை வளர்ப்பில் சிறப்பிடம் பெற்று விளங்குகிறது. அதனால் மன்றாட்டு என்ற சொல் கால்நடை வளர்ப்புடன் தொடர்பு உடைய சொல்லாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

மன்றாட்டு

மன்றாட்டு - மன்று + ஆள் + து என்று பிரித்து பொருள் கொள்ள முடியும். இங்கு மன்று என்பது கால்நடை தங்கி இருக்கும் இடத்தையும், அவை மேயும் இடத்தையும் குறிக்கும் வகையில் இந்தச் சொல் ஆளப்படுகிறது. மன்றாட்டை ஆள்பவன் மன்றாடி என்ற கொங்குநாட்டு கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகின்றன.

சோழர்கள் தொண்டை நாட்டுப் பொருளியல் வாழ்க்கையை வேளாண்மைப் பொருளாதாரத்தோடு இணைந்த வாழ்க்கையாக மாற்ற முயற்சி செய்தனர். அதனால் கால்நடை வளர்பினை போற்றினர். காலகதியில் கால்நடை வளர்ப்பு செல்வாக்கு இழந்து வேளாண்மை மேலோங்கி நின்றது.

திருப்புலிவனம் கல்வெட்டுகளில் வரும் மன்றாடிகள் பெயர்கள்

மன்றாடி பெயர்	A.R.E. No.
மன்றாடிபெருங்காடன் மகன் உடையான்கோன் பிடாரன் மகன் செங்காடக்கோன்	A.R.E. No.43 of 1898
திருவிளக்கு மன்றாடி - நல்லக்கம்பக்கோன்	A.R.E. No.208 of 1923
திருவிளக்கு மன்றாடிகளில் - திருவேகம்பக்கோன் திருப்புலிவனக்கோன், நல்லக்கம்பக்கோன் ஆழ்வார்கோன் திருப்புலியும், சோழக்கோன்பாகன் இவன் தம்பி பெரிய பெருமாளும், பழுமடைக் கோன், எழும்போதன் இலையான் கோன், பள்ளிக்கட்டுக் கோன் மகன் பெருமாளும் ஏறக கோன், சேவகன் மகன் செல்வன், கோமாளிக் கோன்	A.R.E. No.209 of 1923
சேவக்கோன் மகன் செல்வனேன் மலையக்கோன் அருளாளன் மகன் கச்சியேன் இவன் தம்பி நாராயணன்	A.R.E. No.211 of 1923
மன்றாடி குடிமக்களில் திருவேகம்பக் கோன், இவன் தம்பி சேனன் இவன் தம்பிசாரன், அமுதக்கோன் தித்தன், சிவன் கோன் தாழினி, பொன்னைக் கோன் உடையான் உடையான், செல்லக் கோன் மகன் கோவிந்த கோன்	A.R.E. No.212 of 1923
திருவிளக்கு மன்றாடிகளில் வாணராயன் கோன் மகன் அழகன் மன்றாடிகள் மரிசூதி சீர்பாதமும்	A.R.E. No.213 of 1923
மன்றாடி மந்தி சாத்தனும் சென்னி செல்வனும் திருமானம்	A.R.E. No.395 of 1923

❖✡❖

விழாக்களும் வழிபாடுகளும்

வழிபாடும் - விழாக்களும்

சிவாலயங்களில் பொதுவாக நித்திய வழிபாடு என்பது உசத்கால பூசையோடு தொடங்குகிறது. உசத்கால பூசையின் முடிவில் சூர்யோதயம் ஆகக் கூடியதாக இருக்க வேண்டும். இது ஆறுகால பூசையில் சேராது.

ஆறுகால பூசை

1. கால சந்தி பூசை சூர்யோதயம் முதல் காலை 9 மணி வரை, 2. உபசந்தி பூசை 9 - 10½ மணி வரை, 3. உச்சிக்கால பூசை 10½ - 12 மணி வரை, 4. பிரதோச பூசை 4½ - 6 மணிவரை, 5. சாயங்கால பூசை 6 - 7½ மணி வரை, 6. அர்த்தகாம பூசை 7½ - 9 மணி வரை, 12 - 4 மணி வரை திருக்கோயில் சார்த்தப்பட்டிருக்க வேண்டும்.

பிரதோசம் தினமும் நடைபெறும் பிரதோசம் வேறு சதுர்தசியில் நடைபெறும் மகாப்பிரதோசம் வேறு.

பூசை வகைகள்

ஆலயத்தில் நாள்தோறும் பூசையானது 1. சாங்கம், 2. உபாங்கம், 3. பிரத்யங்கம் என்று மூன்று வகைபடும்.

சாங்கம்

1. அபிஷேகம், 2. பாத்யம் (திருவடி நீர்) 3. ஆசமனீயம் (திருவாய்நீர்) 4. அர்க்கியம் (திருமுடி நீர்), 5. ஆடை, 6. ஆபரணம், 7. சந்தனம், 8. மலர் ஆகிய எட்டும் சாங்கம்.

உபசாங்கம்

1. தூபம், 2. தீபம், 3. திருநீறு அணிவித்தல், 4. குடை, 5. கண்ணாடி, 6. சாமரம், 7. விசிறி, 8. வியசனம் [ஒரு வகையான விசிறி] 9. நாட்டியம், 10. கீதவாத்தியம் என்ற பத்தும் உபாங்கம்.

பிரத்தியங்கம்

1. நிவேதனம் என்னும் பலியிடுதல்

2. ஓமம் செய்தல்

3. நித்திய உத்சவம்

4. களுகோதக தானம்

5. சுருகோதகம் - உள்ளங்களை வாழ்த்துரை வழங்கல் எனப்படுபவை பிரத்தியங்கம்.

தினப்படி

அன்றாடம் பூசைக்கு தேவைப்படும் பொருட்கள் கோயில் கணக்குகளில் தினப்படி என்று குறிக்கப்படுகின்றன.

வார ஏறுபடி

வெள்ளிக்கிழமை போன்ற நாட்களில் அதிகப் படியாக தேவைப்படுகின்ற பொருட்கள் வார ஏறுபடி எனப்படும்.

பட்ச ஏறுபடி

15 நாட்களுக்கு ஒருமுறை (அமாவாசை, பிதோசம்) போன்ற நாட்களில் தேவைப்படுகின்ற பொருட்கள் பட்சஏறுபடி என்று கூறப்படுகிறது.

மாத ஏறுபடி

மாதப்பிறப்பு போன்ற நாட்களில் தேவைப்படுகின்ற அதிக பொருட்கள் மாத ஏறுபடி எனப் படிபடியாக வகையினை அறியலாம்.

பூசைகள் மற்றும் விழாக்கள்

திருப்புலிவனம் - வியாக்ரபுரீஸ்வரர் ஆலயத்தில் குறிப்பிட்ட சில பூசைகளும், விழாக்களுமே மட்டுமே நடைபெறுகின்றன. அவை

தினபூசை 1. காலை சந்தி, 2. சாயரட்சை சந்தி, 3. அர்த்த சாமம் போன்ற தின பூசைகளும், வாரபூசை, 4. சிம்ம தட்சிணாமூர்த்திக்கு வியாழன் தோறும் சிறப்பான வார பூசையும்

மாதபூசை 5. பிரதோசம், 6. கிருத்திகை போன்ற மாத பூசைகளும், 7. விநாயகச் சதுர்த்தி அன்று விநாயகர் உற்சவமும், 8. மாசிமகம் - செங்குந்த முதலியார் சார்பிலும், 9. மார்கழி மாத விடியற் கால பூசை - கோயில் நிர்வாகம் சார்பிலும், 10. தை காணும் பொங்கல் - வன்னிய சமுதாயம் சார்பிலும், 11. பங்குனி உத்திரம் - யாதவ மரபினர் சார்பிலும், 12. பங்குனி கிருத்திகை - மேளக்காரர் பாட்சயம் பிள்ளை சார்பிலும், 13. சனிப்பெயர்ச்சி - கோயில் குருக்கள் சார்பிலும், 14. மார்கழி திருவாதிரை திருவிழா - திருவான்மியூர் திருத்தொண்டர் சங்கம் சார்பிலும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

திருப்புலிவனம் 1200 ஆண்டுக் கால பழமையான கோயிலைக் தன்னகத்தே கொண்டு விளங்குகின்ற ஊர். இவ்வூர் அரசியல் சிறப்பு வாய்ந்து திகழ்ந்த நிலை சோழர் காலத்தில் இருந்து உருவாயிற்று.

சோழர்களுக்கு முன் பின் காலங்களில் சமயம் சமூக அரசியலை ஆட்சி செய்யும் நிலையில் இருந்தது. சோழர்கள் அனைத்து சமயங்களையும் ஆதரித்த போதிலும் சைவ சமயத்திற்கு சிறப்பிடம் அளித்தனர். சோழப் பேரரசு சமயத்தின் மூலமாக கோயில்களின் மூலமாக தன்னுடைய அதிகாரத்தை கொண்டு செலுத்தியது. பிரமதேயங்கள் கோயில் நிர்வாகத்தில் பங்குப் பெற்றன. இடையர் மரபினைச் சேர்ந்த மன்றாடிகள் கோயில் நிர்வாகத்தில் பங்கு பெற்றனர்.

வியாக்ரபுரீஸ்வரர் கோயில் கல்வெட்டுகள் மூலம் அரசர்கள் மட்டும் இன்றி தனி நபர்களும் தானம் அளித்துள்ளனர். இதன் மூலம் அரசர்கள் மட்டுமின்றி பொது மக்களும் கோயில் வளர்ச்சியில் ஆர்வம் கொண்டிருந்தது தெரிய வருகிறது. மொத்தத்தில் சோழர் காலத்தில் மிகுந்த செல்வாக்கு பெற்று இருந்தது. பின்னர் வீழ்ச்சியுற்ற நிலையை அடைந்து பின்னர் விஜயநகர பேரரசின் காலம் முதல் மீண்டும் புத்துயிர் தொடங்கியது. ஆயினும் அருகில் உள்ள உத்தரமேரூர் இதன் வளர்ச்சியை பெரிதும் தடை செய்து விட்டது.

புதிய கண்டுபிடிப்பு

திருப்புலிவனம் - வியாக்ரபுரீஸ்வரர் ஆலயத்தின் இடிபாடுகள் இடையே கள ஆய்வு மேற் கொண்ட பொழுது ஆய்வாளரால் இந்த இரு சிம்ம கால்கள் கண்டறியப்பட்டன.

மண்ணில் புதைந்த நிலையில் இருந்த இந்த இரண்டு கால்களில் பாதம் மட்டுமே வெளியே தெரிந்தது. கடப்பாறை, மண்வெட்டி, ஆகியவற்றைக் கொண்டு இந்த இடத்தை தோண்டி மண்ணை அகற்றிப் பார்த்த பொழுது தான் மேற் காணும் இரு சிம்மக் கால்களும் உடைந்த நிலையில் வெளியே ஆய்வாளரால் எடுக்கப்பட்டது.

இந்த இரு சிம்ம கால்களின் அமைதியை காணும்பொழுது மகாபலிபுரம் - இராஜசிம்மனின் மண்டப தூண்களில் காணப்படும் சிம்மத்தின் கால்களை ஒத்தது போல தோன்றுகிறது.

மேலும் உத்திரமேரூர் குடவோலை புகழ் கல்வெட்டு உள்ள பெருமாள் கோயிலில் உடைந்த ஒரு தூணில் காணப்படும் சிம்மத்தின் கால்களும் திருப்புலிவனத்தில் காணப்படும் சிம்ம கால்களும் ஒரே மாதிரியாக இருக்கிறது.

திருப்புலிவனத்தில் இருந்து காஞ்சிபுரம் செல்லும் சாலையில் திருப்புலிவனத்தில் இருந்து ½ கி.மீ தொலைவில் நவகண்ட சிற்பம் ஒன்று கண்டறியப்பட்டது.

மீண்டும் அதனை ஆய்வு செய்ய முயன்ற போது அதனை புதிதாக கட்டி வரும் மாரியம்மன் கோயிலில் ஒரு சிறு தெய்வ வழிபாட்டு தெய்வமாக்கி விட்டனர். இதன் காரணமாக இந்த நவகண்ட சிற்பம் குறித்து ஆய்வு மேற்கொள்ள இயலவில்லை.

❖✡❖

திருப்புலிவனம் வியாக்ரபுரீஸ்வரர் ஆலய கல்வெட்டுகள்

திருப்புலிவனம் வியாக்ரபுரீஸ்வரர் கோயில் கிழக்கு சுவரில் உள்ளவை.

ஸ்வஸ்தி ஸ்ரீ திருபுவனச் சக்கரவர்த்திகள்
மதுரையுங் கொண்டு பாண்டியன் முடித்
தலையும் ஈழமுங் கொண்டருளிய ஸ்ரீ
குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு
18 ஆவது ஜயங் கொண்ட சோழமண்டலத்துக்
காலியூர்க் கோட்டத்து தனியூர் ஸ்ரீ
ராஜேந்திர சோழ சதுர்வேதி மங்கலத்து
உடையார் ஸ்ரீ திருப்புலி வலமுடையார்க்கு
இம்மண்டலத்து களத்தூர்க் கோட்டத்து
ஐஞ்சூர் முல்லைப் பாடித் திருச்சூர்
கண்ணப்பன் ஆதி நாயகன் பஞ்சநதி வாணனை
இராசராச நீல கங்கரையன் வைத்த திரு
நந்தா விளக்கு ஒன்றுக்கு
விட்ட பசு 32-ம் இருஷபம் 12-ம் இப்பசு
முப்பத்திரண்டும் இருஷபம் ஒன்றும் இந்
நாயனார் கோயிலில் திரு நுந்தா விளக்குக்
குடிமக்களில் மன்றாடி பெருங்காடன்
மகன் உடையான் கோன் விளக்கு அரையும்

நம்பி மகன் இராசுக் கோன் விளக்காலும்
பிடாரன் மகன் செங்காடக் கோன் விளக்கு
காலும் ஆக விளக்கு ஒன்றுக்கு இப்பசு முப்பத்திரண்டும்
இருஷபமும் கைக் கொண்டு செல்வ இராச கேசரியாலே
நித்தியம் உழக்கு நெய் சந்திராதித்த
வரை செலுத்தக் கடவோமாக சம்மதித்து
சிலாலேகை ப(பண்ணிக் கொடுத்தோம்)

2. A.R.E. No.44 of 1898

கோயிலின் தெற்கு சுவரில்
ஸ்வஸ்தி ஸ்ரீ பூமேல் வளர பொன்மார்பு
புனர . . . . கலைமகள்
நலம் பொது நிற்ப விசையமா மகள் வெல்
பயத்திருப்ப விசையன் செல்வி எண்
டிசை வளர்ப்ப நிருபா வந்திரைஞ்ச
நில மடந்தையைத் திருமணம் புணர்ந்து
நாவளர் திருமணி முடி கலித்தென
மணிமுடி சூடி பல ஞாலத்துப் பல்சுழி
குழி நடப்பச் செம்பொன் வீரசிம்மாசனத்துப்
புவன முழுதுடையாளோடும் வீற்றிருந்தரு
ளிய கோராச கேசரி வன்மரான
திருபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க
சோழ தேவர்க்கு யாண்டு ஒன்பதாவது
ஜயங்கொண்ட சோழ மண்டலத்துக்

காலியூர்க் கோட்டத்துத் தனியூர் ஸ்ரீ ராஜேந்திர

சோழ சதுர்வேதி மங்கலத்து ஆளுடையார்

திருப்புலிவலமுடைய மகா தேவர்க்கு வெண்குன்ற கோட்டத்து

இருபேடு நாட்டுப் பெருநலூர்க்குடிப் பள்ளி

அம்முனியனான செல்வப் பொறையன்

பரிவேட்டை போனவனை ஒய்மா நாட்டு

சூழ்ச்சி பாக்கத்துக் குடிப்பள்ளி சிங்க

னான தொண்டைமான் சோழன்

பெரியவரைய மகன் தேவன் இவனைக்

கைப்பிழையால் எய்தமையில் இவனுக்கு

நன்றாக அரைத் திரு நுந்தா விளக்கு

க்கு விட்ட பசு பதினைஞ்சு.

3. A.R.E. No.45 of 1898

ஸ்வஸ்தி ஸ்ரீ புகழ்மாது விளங்க ஜயமாது

விரும்ப நிலமகள் நிலவ மலர் மகள்

புணர உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி

மீனவர் நிலை கெட வில்லவர் குலைதர

விக்கலன் சிங்கணன் மேல் கடல் பாயத்

திக்கனைத்தும் தன் சக்கர நடாத்தி

வீரசிம்மாசனத்து புவன முழுதுடையாளோடும்

வீற்றிருந்தருளிய கோராசகேசரி வன்மரான

சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க

சோழ தேவர்க்கு யாண்டு 25 ஜயங்

கொண்ட சோழ மண்டலத்து காலியூர்க்

கோட்டத்து தனியூர் ஸ்ரீராசேந்திர சோழ சதுர்வேதிமங்கலத்து

திருப்புலிவலமுடையார்க்கு புலிவலநாட்டு

புலிவாய்க் காத்தான் ராசேந்திர சோழப்

பெடையி . . . . (முடியவில்லை).

4. A.R.E. No. 198 of 1923

மத்திய கோபுரத்து வடக்குச் சுவரில் உள்ளது.

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள்

ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர் விக்கிரம

சோழபுரத்து கோயிலுள் அபிஷேக மண்டபத்து

முத்துப் பந்தலில் கீழ் பள்ளிப் பீடத்து

எழுந்தருளி இருந்து திருவாய் மொழிந்தரளினபடி

ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துக்

காலியூர்க் கோட்டத்து இராசேந்திர சோழ

சதுர்வேதி மங்கலத்து திருப்புலிவலமுடைய

மகாதேவர்க்கு தேவ தானமாக வேண்டும்

நிமந்தங்களுக்கு இருப்பதாக இக்

கோட்டத்து வெதுங்காடு நாட்டுப் பாப்பன் நல்லூர்

நிர்ணயிக்க புர வேலியும் கொல்லை

நிலம் 20 வேலியும் ஆக நிலம் 60 வேலியும்

இத்தேவர்க்கு தேவதான இறையிலியாக

இட வேண்டுமென்று இக்கோயிலில்

பிடாரன் கண் பெற்றாரைக் காட்டி

மீனவன் மூவேந்த வேளான் நமக்குச் சொன்னமையில்
இத்தேவர்க்கு தேவதான இறையிலியாக
12-ஆவது முதல் முன்பு நின்ற பழங்காணி
யாளர்க்கே காணியாகவும் கொடுத்து
தேவ தான இறையிலியாக விடுவதென்று
திருவாய் மொழிந்தருளினார் இவை
விசையராயன் எழுத்து இவை கங்கைக்
கொண்ட சோழக் களப்பாளராயன்
எழுத்து இவை வயநாட்டரையன் எழுத்து
இவை முகவெட்டி நாயகம் நெற்குன்றங் கிழான் எழுத்து

அரசாணியாலை - மனை

5. A.R.E. No.199 of 1923

ஸ்வஸ்திஸ்ரீ எம் மண்டலமும் கொண்டாற்
. . . . . . கர வருஷாதி தை மாதத்து ஒரு நாள்
ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து
எயிற் கோட்டத்து மாகறல் மண்டலத்து
தென்கரை உய்யக் கொண்டார் சோழவள நாட்டு
சேற்றூர் உடையான் பாம்பணி . . . . ரர்
உண்ணாமலை நாச்சியார்க்கு முதுகண்ணனான
மாகறல் பட்டியர் பெரியன் மண்டல பூஷன்
பாம்பணி . . . . னப்படிக்கு கல்வெட்டு திரு இட்டுக்
கொடுத்த பரிசாவது இந்தப் பல்லவராயன்
இன்றியே ஒழிந்த படியாலும் காலம் காப்பான்

படியாலும் வேரு முதல் இல்லாத படியாலும் இவரைக்
காப்பாற்றுவார்
இல்லாமல் எங்களுக்கும் இவர்க்கும் (இட்டுக்)
காப்பாற்றுக் கடைப் படாத படியாலும் முன்னாள்
எங்கள் பாட்டனார் பல்லவராயர் உக்கல்
க . . . . . . ரகையில் அரசாணியாலை என்று
பேருடைய ஊர் நான்கெல்லை முற்றும்
கொண்டுடைய காதனப்படி மனை 8318
(அவறு) நேரக்காதபடியாலே இந்த ஊரை
விலை நோக்கி மரியாதைக்கு விற்று இந்தச்
சாதனம் திரிவு (தீர்வு) இட்டுக் கொடுத்து
பணம் வா . . . . . . சொன்னபடியாலே இந்த
ஊர் விற்று வாங்க கொடுத்த 340
இப்பணம் முன்னூற்று நாற்பதுக்கும் இந்த
ஊர் விலையாக . . . . தும் காட்டி ஏற்ற
கிழிகைச் செலவனக் கைக்கொண்டு
ஊர் விலைப்பிரமாணப்படிக்கு கல்வெட்டுத்
தரவு செய் . . . . . ரம் பணிந்தானேன்
இப்படிக்கு இவை பாம்பணிந்தான் எழுத்து ॥.

குளத்தூர் - திருநாமத்து காணிக்கை

6. A.R.E. No. 200 of 1923

கோபுத்தின் வடக்கு மேற்கு சுவரில் உள்ளது
ஸ்வஸ்திஸ்ரீ சகலலோக சக்கரவர்த்திகள்

ஸ்ரீஇராச நாராயணன் சம்புவராயற்கு யாண்டு

7-ஆவது (ஏழாவது) துலா ஞாயிற்று

பூர்வ பட்சத்து சஷ்டியும் திங்கள் கிழ . . . . . . த்து காலியூர்க்

கோட்டத்து உத்ரமேரூர் வடக்கு மடைவிளாகம்

புலிவன நாட்டு உடையார் திருப்புலிவனம்

உடைய நாயனார் கோவில் ஸ்ரீஉருத்திர மகேஸ்வரர்க்கும்

தானத்தார்க்கும் இம்மண்டலத்து இக்கோட்ட

த்து உத்தரமேருவான இராசேந்திர சோழ

சதுர்வேதி . . . . . க்கு வருகிற தொக்கையன் ஆற்றுக்

காலில் திருப்புலிவனத்து ஏரிக்கு பிரிந்து

பாய்கிற முறையில் முகப்பிலே சிறிதிடம் பறிந்து

கிடந்த இடத்தை நாங்கள் அடைத்தோமென்று

இது காரணமாக பழி பிறக்கையில் . . . . . ககும்

படைவிட்டேறி வந்த நாயனார் திருமுன்பே

கேட்டு இரண்டு திறத்தார்க்கும் பொருந்தினபடி

இந்த முறையில் புறவாயில் குலையாமல்

கிடக்கிற இடத்தில் பூர்வ பிரமாணப் படியே புற

வாய்க்கு உள்வாய் வருகிற ஒழுங்குக்கு

ஆசாரியன் அறுதி இட்ட படியே திருப்புலிவனத்து

ஏரி நீர் . . . . டு கொண்டு திருப்புலிவனம்

மருத்துவான்பாடி மாப்பாண்டார் பூண்டி

இவ்வூர்களுக்கு வரும் விழுக்காடு இவர்கள்

இட எங்கள் ஊர்களுக்கு வரும் விழுக்காடும்

இட்டு நாங்கள் படுப்பித்து பூர்வ மரியாதையிலே

நீர் பாய . . . . . கு திருநாமத்துக் காணியாக நாங்

-கள் கொடுத்த உங்கள் ஷேத்திரமான

கீழ்பிடாகைகளில் குளத்தூர் மேற்பாற்கெல்லை பிறையக்குக்

கிழக்கு வடபாற்கெல்லை சிற்றாமூர் எல்லைக்கு

தெற்கும் தென்பாற் கெல்லை அத்திபாக்கத்து

எல்லைக்கு வடக்கும் கீழ்பாற் கெல்லை

கலக்கிலி . . . . யுறக் கலனை உட்பட இந்

நாயனார்க்கு திருநாமத்துகாணியாக

சந்திராதித்தவரையும் நடக்கும்படி கொடுத்தோம்.

நாங்கள் திருநாமத்துக் காணியாக கொடுத்த

குளத்தூர்க்கு எப்பேர்ப்பட்ட கலனுமில்லை

கலனுளவாய்த் தெ . . . . மிலும் வெட்டிக்

கொண்டு திருச்சூல தாபனம் பண்ணிக் கொள்ளக்

கடவதாகவும் சம்மதித்துப் பிரமாணம் பண்ணிக் கொடுத்தோம்

உடையார் திருப்புலிவனமுடைய நாயனார் கோயிலில்

ஸ்ரீமகேஸ்வரர்க்கும் தானத்தார்க்கும்

உத்திரமேரூவான . . . . . . க்கு உத்தரமேரூ

உடையான் வைத்தியப் பிரியன் எழுத்து இப்படிக்கு

இவை உத்தரமேரூ உடையான் எழுத்து

இப்படிக்கு இவை வீரவல்லி கோவிந்த பட்டன் எழுத்து

இப்படிக்கு இவை மாடபொ . . . . . த்து

இப்படி அறிவேன், ஆலத்தூர் சாத்தந்தை முதலி

-யானேன் இப்படி அறிவேன் சாத்தந்தை திருவடி ஆழ்வானேன்

இப்படிக்கு இவை நந்திக்கிராமத்து பாதகுந்தி பட்டன் எழுத்து இப்ப

-டிக்கு இவை பிராந்தூர் பெரிய உத்தம நம்பி எழுத்து . . . .

கற்பூரப்பிள்ளை வீர சம்பவாணராயனேன்.

7. A.R.E. No. 201 of 1923

கோபுரத்து மேற்கு சுவரில் உள்ளது

ஸ்வஸ்திஸ்ரீ மன் மகாமண்டலீசுவரன்

அரிஇராயனிபாடன் பாஷைக்கு தப்புவராய

கண்டன் ஸ்ரீ விருப்பண உடையாற்கு

செல்லா நின்ற விபவ வருஷாதி மார்கழி

மாதம் பன்னிரண்டாந் தேதி நாள் திருப்புலிவனத்தில்

கைக்கோளர்க்குக் கல்லு வெட்டிக் கொடுத்த

-படி நாங்கள் இறையாற்றாமல் புறப்பற்றே

சிதறியோடிப் போகையில் தங்கள் 3 பேர்க்கு

தனிக் கடமை வாசற் பணம் கொடி சூலவரி

மற்றும் எப்பேற்பட்ட சகல உபாதிகளும் உட்பட

மலையாங்கட்குக் குத்தகையாக தறி

ஒன்றுக்கு ஆட்டைவரைக்கும் கொள்ளும் மனை

நெய்காசும் உட்பட 5 இப்பணம்

அஞ்சும் அழிய வேறு ஒன்றும் சொல்லக்

கடவதில்லை சந்திராதித்த வரையும்

நடக்கக் கடவதாகவும் இந் நாட்டார்

ஆணை அழிவு சொன்னார் உண்டாகில்

செழியங்க நல்லூர் கல்வெட்டு

8. A.R.E. No. 202 of 1923

ஸ்வஸ்திஸ்ரீ மன்மகா மண்டலேஸ்வரன்

அரிய இராய விபாடன் பாஷைக்கும் தப்பும்

இராயர் கண்டன் மூவராயர் கண்டன்

நேதுராயசூர த்தாணன் பூர்வதக்ஷிணபாச்சிம

உத்தர சத் சமுத்ராதிபதி ஸ்ரீ வீரபிரதாப தேவராய மகாராயர்

பிருதிவிராஜ்ஜியம் பண்ணி அருளா நின்ற

சகாப்தம் 1305 இதன் மேற்செல்லா

நின்ற ஆனந்த சம்வத் சரத்து மேஷ ஞாயிற்று

பூர்வ பக்ஷத்து அஷ்டமியும் சுக்கிரவாரமும்

பெற்ற பூசத்து நாள் செயங்கொண்ட சோழச்

சதுர்வேதி மங்கலத்து மகா சபையோம்

உதகபூர்வ தன்மதானமாக கல்லு வெட்டிக்

கொடுத்தபடி இப்ப . . . . . ங்கள் காணியான

வடபிடாகை கருவேப்பம்பூண்டி நாற்பாற்

-கெல்லையும் உட்பட இந்நாயனாற்கு

நாங்கள் திருநாமத்துக் காணியாக கல்லு

வெட்டிக் கொடுத்தோம் இந்த கருவேப்பம்பூண்டியும்

விபவ வருஷத்து இருஷப ஞாயிற்று பூர்வ

பக்ஷத்து தசமியும் உத்திரமும் பெற்ற

ஞாயிற்றுக் கிழமை நாற் நாங்கள் திருநாமத்துக்

காணியாக உதக பூர்வமாக கொடுத்த

திருச்சித்திரகூட நல்லூரும் ஆக இந்த இரண்டு

ஊரும் ஒரு கலனும் இல்லை கலனுளவாய்த்

தோற்றபடில் நாங்களே கலன் தீர்த்துக் கொடுக்கக் கடவோமா

கவும் இந்த இரண்டு ஊர்க்கும் கீழ்நீர்

மேல் நீர் இடத்தம் பண்ணின குண்டவத்தாவது

ஆகவும் இப்படி சோதித்து இந்த திருவேப்பம் பூண்டியும்

திருச்சித்திரகூட நல்லூர்க்கு உதக பூர்வமாக

கல்லு வெட்டிக் இது திரு . . . . ல்

தாபனம் பண்ணிக் கொடுத்தோம் உடையார்

திருப்புலிவனமுடைய நாயனாற்கு உத்தரன்மேரூர்

மகாசபையோம் இப்படி வீரவல்லி முதலியார்

எழுத்து வீரவல்லி பெருமாள் எழுத்து

ஆத்திக் கொம்பு ஆலிபெருமாள் எழுத்து

இவை மகாஜனனிக் கிரயன் எழுத்து

9. A.R.E. No. 203 of 1923

ஸ்வஸ்திஸ்ரீ பூமேல் வளர திருப்பொன்மார்பு புணர

நாமேவ கலைமகள் நலம் பெரிது சிறப்ப

விசைய மாமகள் வெற் புயத் திருப்ப . . . . . . ன்

செல்வி எண்டிசை வளர்ப்ப நிருபா வந்திரைஞ்ச

நிலமடந்தையை திருமணம் புணர்ந்து

சீர்வளந் தரும் மணிமுடி கலித்தென மணி

முடி சூடி மல்லை ஞாலத்து பல்லுயிர்க்கெல்லாம்

எல்லையில் இன்பம் இயல் பிணிலெய்தவெண்

குடை நிழற் செங்கோலோச்சி வாழி

பல்லூழி ஆழி நடப்பச் செம்பொன் வீரசிம்மாசனத்துப்

புவனமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய

கோராசகேசரி வன்மரான திரிபுவனச்

சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு

யாண்டு 4 நாலாவது ஜயங்கொண்ட சோழ

மண்டலத்து காலியூர்க் கோட்டத்து தனியூர்

ஸ்ரீராஜேந்திர சதுர்வேதி மங்கலத்து உடையார்

திருப்புலிவனமுடைய மகாதேவற்கு இம்

மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து

வாதவூர் நாட்டு வாதவூரிலிருக்கும்

சிற்றூருடையான் அரங்கன் பட்டனான

செம்பியன் பல்லவரையனேன் வைத்த

திரு நுந்தாவிளக்கு ஒன்றுக்கும் வைத்த

காசு 24 இருபத்து நாலுக்கும் செல்வி

ராசகேசரியால் நித்தம் உழக்கெண்ணை

பலிசை பொலிவதாகவும், இப்பொலிசை

எண்ணை உழக்கு 7-ம் கொண்டு இத்திரு

நுந்தாவிளக்கு ஒன்றும் சந்திராதித்த வரை

எரிக்கக் கடவோமாக சோதித்து இக்காசு
-களைக் கொண்டோம் இக்கோயிலில்
திருகாப்பு நீக்கி காணி செய்யும் சிவப்
பிராமணரோம் இதற்கு விரோதம்
செய்வோர் கங்கையிடைக் குமரியிடைப்
பட்ட பாவங் கொள்வோர்.
இது பன்மாகேஷ்வர ரக்ஷை

10. A.R.E. No. 204 of 1923

பன்மரான உடையார் இராஜாதிராஜ தேவற்கு
யாண்ட விலை ஆவணக் கையெழுத்து இக்
கோட்டத்துத் தேவர்க்கு நாங்கள் விற்றுக்
கொடுத்த நிலமாவது வுமணலு பிட்டுக்
காடுங்களரும் ஓடையுமா மங்கலத்து
எல்லைக்குக் கிழக்கும் வடபாற்றாவில்
வடக்கடைய அருளொளிவர முடைய மகா
இவ்வரம்புக்குத் தெற்கு முக்கோல்
நீக்கிச் சொம்மெய் கிழக்குத் தெற்கு
ஒரு கோல் நீக்கி இப் புற்றுக்குக்
கீழ் பாற்கெல்லை மேற்கு நோ . . . .
. . . . ங் குழி உள்ள கலம் உள்ளி . . . . . .

11. A.R.E. No. 206 of 1923

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள்
மதுரையும் ஈழமுங் கருவூரும் பாண்டியன்

முடித் தலையுங் கொண்டருளிய கு . . . . . .
. . . . . . க சோழ தேவர்க்கு யாண்டு 27ஆவது
ஜயங்கொண்ட சோழ மண்டலத்துக்
காலியூர்க் கோட்டத் தனியூர் . . . . ந்திர
சோழ சதுர்வேதி மங்கலத்து உடையார் திரு . . . . .

❖✡❖

நிழற்படங்கள்

கோயில் வெளிப்புறத்தோற்றம்



கருவறை

அதிட்டானம்

சிவலிங்கம்

துவாரபாலகர்

மகாவிஷ்ணு



பிரம்மா

சண்டிகேஸ்வரர்



ஸ்ரீபாலமுருகன்

சிம்மத்தூண்

சோழர் கால ஓவியங்கள்



சோழர் கால ஓவியங்கள்

நூற்றுக்கால் மண்டபம்

மகாமண்டபம்



கோயில் தெப்பக்குளம்